Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, DECEMBER 23, 2021

வியாழக்கிழமை டிசெம்பர் 23, 2021 | ஒளி: 07 கதிர்: 186 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | Free

## “பிரபாகரனுக்கு படிப்பறிவு இல்லை”



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் படிப்பறிவு இல்லாதவர் எனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா, “பயங்கரவாத அமைப்பில் ஆரம்பத்தில் இருந்தவர்கள் எவருக்கும் அவ்வளவாக படிப்பறிவு இல்லை” எனவும் தெரிவித்தார். தொடர்ச்சி P2

## ஒமிக்ரான் தொற்றாளர்களின் எண்ணிக்கை 7ஆக அதிகரிப்பு

இலங்கையில், மேலும் மூன்று ஒமிக்ரான் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என, சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. அந்த மூவருடன் சேர்த்து, இலங்கையில் இனங்காணப்பட்ட ஒமிக்ரான் தொற்றாளர்களின் எண்ணிக்கை 7ஆக அதிகரித்துள்ளது.

ஒமிக்ரோன் மாறுபாட்டுடன் முதலில் ஒருவரும், அதன்பின்னர், கடந்த 16ஆம் திகதியன்று மூவரும் இனங்காணப்பட்டனர். அத்துடன், நேற்று (22) மூவர் இனங்காணப்பட்டனர்.

இந்த எண்ணிக்கை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவப் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் சந்திம ஜீவந்தர ஏற்கெனவே தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ச்சி P2




## அதிவேக நெடுஞ்சாலை விபத்தில் இருவர் மரணம்



தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் ஏற்பட்ட விபத்தில் இருவர் மரணமடைந்துள்ளனர்.

கொட்டாவையில் இருந்து மத்தளையை நோக்கி பயணித்த டிரக் ரக வாகனம், அபருக்க பிரதேசத்தில் நெடுஞ்சாலையோரத்தில் நிறுத்திவைக்கப்பட்டு இருந்தது.

இந்நிலையில், அதேதிசையில் பயணித்த பௌஸர், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிரக் மீது பின்புறமாக மோதியது.

அதில், டிரக் வாகனத்தின் உதவியாளரான கடவத்தையைச் சேர்ந்த 72 வயதான நபரும் கோணவலவை வசிப்பிடமாகக் கொண்ட பௌஸரின் சாரதியான 61 வயதான நபருமே இவ்வாறு மரணமடைந்துள்ளனர்.

டிரக் ரக வானத்தில் ஏற்றப்பட்டிருந்த பொதிகள், கீழே விழுந்துவிடாத வகையில் கட்டப்பட்டிருந்த கயிற்றை, சோதித்துக்கொண்டிருந்த போதே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளதெனத் தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

பல்கலைக்கழக மாணவர்கள்

## கௌரவமான முறையில் செயற்பட்டனர்

### ஜனநாயகம் வென்றுள்ளது என்கிறார் சந்திரிகா

17ஆம் திகதி பட்டமளிப்பு விழாவில் மாணவர்கள் செயற்பட்ட விதமானது சிறப்பாக அமைந்ததாகத் தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மிகவும் அமைதியான முறையில் இந்த மாணவர்கள் தமது உணர்வுகளை வெளிபடுத்தியிருந்தனர் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பில் பலரும் பல விதமான கருத்துகளையும் விமர்சனங்களையும் முன்வைத்திருந்தாலும் அன்று எமது நாட்டின் ஜனநாயகம் வெற்றிகொள்ளப்பட்டது என சுட்டிக்காட்டினார். தொடர்ச்சி P2

தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து தயாரித்திருக்கும்

# மோடிக்கான கடிதத்தின் தலைப்பில் மாற்றம்



### சுமந்திரன் எம்.பி. விசேட அறிக்கை

**கடிதத்தின் தலைப்பு ‘13ஆவது திருத்தத்தை அமல்படுத்தக் கோருதல்’ என இருந்தது**

**‘தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதும் இலங்கை – இந்திய ஒப்பந்தமும்’ என மாற்றப்பட்டுள்ளது**

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துவதற்கு இந்தியாவின் தலையீட்டை கோருவது தொடர்பில், தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களால் தயாரிக்கப்பட்டுள்ள பொது ஆவணத்தின் தலைப்பில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2

## 36,067 பேர் கைது

2021 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் சட்டவிரோத மதுபானம் மற்றும் போதைப்பொருள் சுற்றிவளைப்புகளில் 36,067 பேர் கைது செய்யப்பட்டனர் என கலால் வரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் ஸ்பிரிட் உற்பத்தி செய்தமை அதனை வைத்திருந்தமை மற்றும் கொண்டு சென்றமை தொடர்பில் 18,572 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஹெரோய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டில் 2,296 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என கலால் வரி திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் கபில குமாரசிங்க தெரிவித்தார்.

இந்தச் சுற்றிவளைப்புகளின் போது கைப்பற்றப்பட்ட பொருட்களின் மொத்தப் பெறுமதி 400 மில்லியன் ரூபாயாகும் என்றார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ததன் பின்னர் 116 மில்லியன் ரூபாய் தண்டப்பணம் அறிவிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



அரச வைத்திய அதிகாரிகளின்

## தொழிற்சங்க போராட்டம் வெற்றி

தம்முடைய கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி அரச வைத்தியர்கள், கடந்த 3 நாள்களாக 5 மாவட்டங்களில் ஆரம்பித்த தொழிற்சங்கப் போராட்டமானது நேற்றுமுன் தினம் முதல் நாடளாவிய ரீதியில் விஸ்தரிக்கப்பட்டது எனத் தெரிவித்த அரச வைத்திய அதிகாரிகளின் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக் குழு உறுப்பினர் வாசன் ரட்ணசிங்கம், பாரிய தொழிற்சங்க போராட்டமாக உருவெடுத்த இப்போராட்டம் வெற்றி பெற்றுள்ளது எனத் தெரிவித்தார். தொடர்ச்சி P2

14 வயதான சிறுமி மரணம்:

## தந்தை, சிறிய தந்தை கைது

எஸ்.கணேசன்

கம்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மௌவுன்ட்டெம்பல் பகுதியில் தாக்குதலுக்கு உள்ளான நிலையில், 14 வயது சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார் என கம்பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச் சம்பவத்தை அடுத்து, அச் சிறுமியின் தந்தையும், சிறியதந்தையும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். தொடர்ச்சி P2



## வடக்கு, கிழக்குக்கு சீனா நன்கொடை

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவின் கோரிக்கையை அடுத்து, வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்கு 20 மில்லியன் ரூபாய் பெறுமதியான வைத்திய உபகரணங்களை சீனா நன்கொடையாக வழங்கியது.

மூங்கிலாறு சிறுமி விவகாரம்:

## உறவினருக்கு விளக்கமறியல்

முல்லைத்தீவு, மூங்கிலாறு கிராமத்தில் 13 வயதான சிறுமியொருவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அச்சிறுமியின் உறவினர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது, எதிர்வரும் 04 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். தொடர்ச்சி P2

## யாழ். மாணவன் கொலை: சகோதரனால் முறைப்பாடு

எஸ். தில்லைநாதன்

தற்கொலை என மூடிமறைக்க முற்பட்ட சகோதரனின் கொலைச் சம்பவத்தை வெளிக்கொண்டுவர முனைவதன் காரணமாக, இனந்தெரியாத நபர்களால் பின்தொடர்ந்து அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பில், யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது. உயிரிழந்த மாணவனின் சகோதரனால், யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில், நேற்று முன்தினம், (21) மாலை முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் மூன்றாம் வருட மாணவனாக கல்வி கற்று வந்த மாதா கோவில் வீதி, தொடர்ச்சி P2




## மீனவர் பிரச்சினைகளை தீர்க்க விரைவில் பேச்சு

தமிழ்நாடு - இலங்கை மீனவர்களுக்கிடையே நிலவும் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவர இரு தரப்பு மீனவர் சங்கங்களுடன் இந்திய அரசாங்கம் விரைவில் பேச்சு வார்த்தை நடத்தும் என்று தகவல் வெளியாகியுள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. தொடர்ச்சி P2



## கொரோனாவுக்கு முடிவுகட்டும் ஆண்டாக அமைய வேண்டும்



பிறக்கவிருக்கும் 2022ஆம் ஆண்டு, கொரோனாவை முடிவுக்குக் கொண்டுவரும் ஆண்டாக இருக்க வேண்டுமென, உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2

20 பிரதான நகரங்களில்

## இன்றும் நாளையும் ஜே.வி.பி ஆர்ப்பாட்டம்



அநியாயமான முறையில், எரிபொருட்களின் விலைகள் மற்றும் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன எனக் குற்றஞ்சாட்டியுள்ள ஜே.வி.பி, இந்த விலை அதிகரிப்பை எதிர்த்து, நாடளாவிய ரீதியில் இன்றும் (23) நாளையும் (24) எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கவுள்ளது.

அதிகரித்திருக்கும் எரிபொருள் விலையேற்றத்துக்கு ஏற்ப, மக்களுக்கு நிவாரணத்தை வழங்கு, அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறை போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே, இந்த ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. தொடர்ச்சி P2

அரசாங்கத்தை கவிழ்க்க

## தயாராகுங்கள்

### அரசாங்கத்துக்கு எதிராக யுத்தம் செய்ய அழைப்பு



நாட்டு மக்களுக்காக அரசாங்கத்தை கவிழ்க்கும் நிலைக்கு வந்துள்ளோம் என்றும் அனைத்து மக்களும் அடுத்த வருடம் இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பத் தயாராகுங்கள் என்றும் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, அந்தப் பொறுப்பை ஐக்கிய மக்கள் சக்தி எடுக்க தயாராகவுள்ளது என்று தெரிவித்தார்.

விவசாயிகள் தத்தமது கைகளிலுள்ள விவசாய உபகரணங்களை எடுத்துக்கொண்டு அரசாங்கத்துக்கு எதிராக யுத்தம் செய்யுங்கள் எனத் தெரிவித்த அவர், தொடர்ச்சி P2

## கிணற்றில் விழுந்து உயிரிழந்த சிறுவனுக்கு கொரோனா

க. அகரன்

வவுனியா, கொக்குவெளிப் பகுதியில் கிணற்றில் நீராடச்சென்று உயிரிழந்த சிறுவனுக்கு, கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டது.

அப் பகுதியில் மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்த சிறுவன் ஒருவன், அருகில் உள்ள கிணற்றில் குளிக்கச்சென்ற நிலையில் கிணற்று நீரில் மூழ்கி உயிரிழந்திருந்தார். தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ஒமிக்ரான் தொற்றாளர்களின் எண்ணிக்கை 7ஆக அதிகரிப்பு

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து மேலும் 311 பேர் பூரண குணமடைந்து நேற்று (22) வீடு திரும்பியுள்ளதாக தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய கொரோனா தொற்றிலிருந்து பூரண குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 558,226ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கௌரவமான முறையில் செயற்பட்டனர்

அந்த இளைஞர், யுவதிகள் சிறந்த ஜனநாயக பண்புடன் அவர்களும் இந்த நாட்டு மக்களினதும் ஜனநாயக உரிமையைப் பாதுகாக்க துப்பாக்கியில்லாமல் குண்டு இல்லாமல், தகாத வார்த்தைகளைப் பிரயோகிக்காமல் மிகவும் கௌரவமான முறையில் செயற்பட்டுள்ளார்கள் என்றார்.

அரசாங்கம், அரசாங்கத்தின் பிரதானிகள் இது போன்ற தீர்மானங்களை எடுக்கும் போது, தம்மிடம் கேட்காமல் தம்மை இணைத்துக் கொள்ளாமல் எவரினதும் ஆலோசனையைப் பெறாமல் தவறான தீர்மானத்தை எடுத்து அதனைச் செயற்படுத்தும் போது, விசேடமாக அத்தீர்மானத்தால் பாதிப்பை எதிர்நோக்குபவர்கள் தமது கருத்துகளை வெளியிட சுதந்திரம் உள்ளது எனவும் தெரிவித்தார்.

எனவே, இந்த மாணவர்கள் அன்றைய தினம் ஜனநாயகத்தின் உயரிய நிலையை எடுத்துக்காட்டினர். தமது எதிர்ப்பை ஆங்காங்கே சென்று, பைத்தியகாரத்தனமாகக் காட்டாமல் மிகவும் அமைதியாக பலமான எதிர்ப்பை வெளியிட்டனர். இதையே ஜனநாயகம் என கூறுகிறோம் என்று குறிப்பிட்டார்.

அந்த மாணவர்கள் யார் என தனக்கு தெரியாது. ஆனால் சிரேஷ்ட தலைவர் என்ற ரீதியில் தனது கௌரவத்தை செலுத்துவதாகவும் யார் என்ன சொன்னாலும் அன்று அந்த மாணவர்கள் செயற்பட்ட விதம், 100 சதவீதம் சரியென்றார்.

இந்த மாணவர்களைப் போன்ற, நாட்டை நேசிக்கும் ஏனைய இளைஞர்கள், முதியவர்கள் எந்த அரசாங்கத்தில் இவ்வாறு தவறு ஏற்படும் போதும், மாணவர்களை முன்னுதாரணமாகக் கொண்டு செயற்படுங்கள் என்றார்.

## தொழிற்சங்கப் போராட்டம் வெற்றி

எனினும், ஜனாதிபதி, நேற்று முன்தினம் மாலை தலையிட்டு சுகாதார செயலாளருடன் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துக்கு கலந்துரையாடலை ஒருங்கமைத்து தந்திருந்தார்.

ஒரு தொழிநுட்ப காரணங்களுக்காக போராடிக்கொண்டிருக்கையிலேயே இந்த கோரிக்கைகளை சுகாதார செயலாளர் மட்டத்திலே தீர்க்க கூடிய பிரச்சினைகளாக இருக்கின்ற போது, ஜனாதிபதி இதில் தலையிட்டு இக்கலந்துரையாடலை ஏற்பாடு செய்ய வேண்டிய துரதிஷ்டமான நிலைக்கு சுகாதார அமைச்சு தள்ளப்பட்டுள்ளது என்றார்.

இலங்கையில் சில அரச நிறுவனங்களின் செயற்பாடுகளில் அரசியல் தலையீடுகள் இடம்பெறுகின்றன.

ஆனால் வைத்தியர்கள் நியமனம், இடமாற்றம் தொடர்பான சபையில் அரச மருத்துவ அதிகாரிகள் பங்காளிகளாக இருப்பதால் இதுவரை காலமும் எவ்வித அரசியல் தலையீடுகளும் நியமனம், இடமாற்றத்தில் இடம்பெறவில்லை.

ஆனால் முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவின் காலத்தில் இடமாற்ற சபையில் குளறுபடியை ஏற்படுத்தி அரச மருத்துவ அதிகாரிகளை சங்கத்தை வெளியேற்றி அரசியல் தலையீடுகளை செய்வதற்கு முயற்சித்தார்.

ஆனால், அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இந்த செயற்பாட்டுக்கு தமது எதிர்ப்பை வெளியிட்டதன் காரணமாக சுகாதார அமைச்சர் தன்னுடைய முடிவிலிருந்து பின்வாங்கும் நிலை ஏற்பட்டது.

துரதிஷ்டவசமாக கடந்த நல்லாட்சியின் சுகாதார அமைச்சரான ராஜித சேனாரத்னவின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளே தற்போதும் முன்னெடுக்கப்படுகின்றன.

தற்போதைய சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, அரச வைத்திய அதிகாரிகளை இடமாற்ற சபையிலிருந்து நீக்கி, அங்கு அரசியல் தலையீடுகளை செய்வதற்கு முயற்சிக்கின்றார்.

இந்த செயற்பாட்டுக்கு எதிராக தொழிற்சங்கப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றோம் என தெரிவித்த அவர், எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றார்.

# மோடிக்கான கடிதத்தின் தலைப்பில் மாற்றம்

அது தொடர்பில், நேற்று (22) வெளியிட்டிருந்த விசேட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் முன்வைப்பதற்காக தமிழ்க் கட்சிகள் தமது கோரிக்கையாக தயார் செய்த கடிதத்தின் தலைப்பு ‘13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தக் கோருதல்’ என இருந்த நிலையில், தற்போது ‘தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதும் இலங்கை - இந்திய ஒப்பந்தமும்’ என மாற்றப்பட்டுள்ளது.”

“புதிய வரைவு தயாரிக்கப்பட்டபோது அதன் நோக்கம், பொருள் என்பன மாற்றப்பட்டதே புதிய ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆவணமும் தற்போது ஒரு வரைவாகவே இருக்கின்றது.

இந்த வரைவை அல்லது இதன் திருத்தத்தை கட்சிகள் ஏற்றுக்கொண்டால் மட்டுமே இது கைச்சாத்திடப்படும்.

சில ஊடகங்கள் தொடர்ந்தும் தவறான தலைப்பில் இது சம்பந்தமான செய்திகளை வெளியிடுவதால் இந்த முக்கிய ஊடக அறிக்கை வெளியிடப்படுகின்றது” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 14 வயதான சிறுமி மரணம்: தந்தை, சிறிய தந்தை கைது

காதல் விவகாரம் காரணமாக சிறுமியின் சிறியதந்தை நேற்று முன்தினம் (21) அவரை தாக்கியுள்ளார். அதனையடுத்து அச்சிறுமி நோய்வாய்ப்பட்டார். தனது உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டதென சிறுமி புலம்பியபோது, சிறுமியின் தந்தை மீண்டும் தாக்கியுள்ளாரென ஆரம்பக் கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

அதன்பின்னர் சிறுமியை அவரது தாயார் அருகிலுள்ள வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிட்டார். அங்கு வைத்து அச்சிறுமி மயக்கமடைந்துவிட்டார். இதனையடுத்து, கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி அச்சிறுமி உயிரிழந்துவிட்டாரென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கம்பளையில் உள்ள பிரபல மகளிர் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் நிபுனி நுவந்திகா பண்டார (வயது 14) என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிறுமியின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கம்பளை வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

கம்பளை நீதிமன்றத்தின் நீதவானின் மரண விசாரணைகளின் பின்னர் பிரேத பரிசோதனைகள் இடம்பெற்று சடலம், உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுமென பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் சிறுமியின் தந்தை மற்றும் சிறியதந்தை ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவ்விருவரையும் நீதிமன்றில் ஆஜர் செய்ய நடவடிக்கைகள் எடுத்துள்ளதாக தெரிவித்த கம்பளை பொலிஸார் இச்சம்பவம் தொடர்பில், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## யாழ். மாணவன் கொலை...

துன்னாலை வடக்கு, கரவெட்டியைச் சேர்ந்த சிதம்பரநாதன் இளங்குன்றன் என்பவர், 17.11.2020 அன்று, அவர் வாடகைக்கு தங்கியிருந்து கல்வி கற்று வந்த வன்னியசிங்கம் வீதி, கோண்டாவில் கிழக்கில் உள்ள வீட்டில் கொலை செய்யப்பட்டு, தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இதனை பொலிஸார் தற்கொலை என தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பில் அவரது சகோதரன் பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோரின் கவனத்துக்கு கடிதம் மூலம் கொண்டுவந்ததைத் தொடர்ந்து, பிரதமரின் பணிப்புக்கமைய, யாழில் விசாரணை குழு ஒன்று அமைக்கப்பட்டது.

அந்த விசாரணைக் குழு, இவ்வாண்டு, மார்ச் மாதம் விசாரணைகளை ஆரம்பித்திருந்த நிலையில், உறவினர்களால் இக்கொலை தொடர்பில் சந்தேகநபர்களும், முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பான தகவல்களும் வழங்கப்பட்டிருந்தன

அதாவது, அன்றைய தினம் பிற்பகல் 1 மணிக்கு, கதவு திறந்தவர்கள் ஊடாகவே மேற்படி மாணவன் உயிரிழந்த விடயம் தெரியவந்தது.

ஆனால், அதற்கு முன்பாக முற்பகல் 10.30 மணிக்கு சமூக ஊடகத்தில் தவறான முடிவெடுத்து தற்கொலை செய்து கொண்டுள்ளதாக செய்தி வெளியிடப்பட்டிருந்ததுடன், அவர்களின் ஊரிலும் பலருக்கு மாணவன் இறந்தமை தொடர்பான தகவல் தெரிந்திருந்தது.

இது தொடர்பான தகவல்களை விசாரணை குழுவுக்கு வழங்கியும் தற்போது அவர்கள் கொடுத்த தகவல்கள் சில இல்லை எனவும் மீண்டும் தகவல் தருமாறும் விசாரணைக் குழுவின் உபபொலிஸ் பரிசோதகர் பிரதீப் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை(19) விசாரணை பிரிவுக்கு சென்று தாங்கள் வழங்கிய தகவல்கள் எவ்வாறு தவறவிடப்பட்டது என பொலிஸாருடன் முரண்பட்டதைத் தொடர்ந்து, திங்கட்கிழமை (20) இரவு இனந்தெரியாத நபர்கள் சிலர் பின்தொடர்ந்ததன் காரணமாக அவரது சகோதரன் தனது வீட்டுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

எனவே, தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் எதுவும் ஏற்படலாம் என்ற அச்சத்தினால் தமக்கான பாதுகாப்பை உறுதி செய்யுமாறு அவரது சகோதரன் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில், நேற்று முன்தினம், (21) மாலை முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.

## கொரோனாவுக்கு முடிவு கட்டும் ஆண்டாக அமைய வேண்டும்

இது தொடர்பில் அவர் கூறுகையில், “2020இல் எச்.ஐ.வி, மலேரியா மற்றும் காசநோய் ஆகியவற்றால் ஏற்பட்ட உயிரிழப்புகளை விட, 2021இல் கொரோனா தொற்று காரணமாக உலகளவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகம்.

கொரோனாவின் மாறுபாடான ஒமிக்ரான் தென் ஆப்பிரிக்காவில் கண்டறியப்பட்ட நிலையில், தற்போது அது பல நாடுகளுக்குப் பரவி வருகிறது. இந்நிலையில், 2022 ஆனது, நாம் தொற்றுநோயை முடிவுக்குக் கொண்டுவரும் ஆண்டாக அமைய வேண்டும்” என்றார்.

“2022 ஆம் ஆண்டு அனைத்து நாடுகளும் எதிர்கால பேரழிவைத் தடுப்பதற்கும், நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான முயற்சிகளை விரைவுபடுத்துவதற்கும், முதலீடு செய்யும் ஆண்டாகவும் இருக்க வேண்டும்”. என்றும் அவர் கூறினார்.

ஒமிக்ரான் வைரஸ் வேகமாக பரவி வருவதால், கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு கொண்டாட்டங்களை ஒத்தி வைக்க வேண்டும் அல்லது இரத்துச் செய்ய வேண்டுமென உலக சுகாதார நிறுவனம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரசாங்கத்தை கவிழ்க்கத் தயாராகுங்கள்

அதேபோல் இல்லத்தரசிகள் சமையலறையிலிருக்கும் உரல், கத்தி, சமையல் எரிவாயு உள்ளிட்ட அனைத்து பொருட்களையும் எடுத்துக்கொண்டு வீதியில் இறங்குங்கள் இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கு என்றார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (22) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், இந்த நாட்டை, மக்கள் வாழக் கூடிய நாடாக விரைவில் மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. உணவு, டொலர் பிரச்சினைக்கு தீர்வைப் பெற வேண்டும். உரப்பிரச்சினைக்கு தீர்வைப் பெற வேண்டும் என தெரிவித்தார்.

எனவே இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவது மாத்திரமே தற்போதைய அனைத்து பிரச்சினைகளுக்கும் ஒரே தீர்வு, எனவே அனைத்து மக்களும் அடுத்த வருடம் இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பத் தயாராகுங்கள் என்றார்.

இது கொரோனாவால் ஏற்பட்ட நிலை இல்லை. உலகில் ஏனைய நாடுகளில் வெளிநாட்டு இருப்புகள் அதிகரிக்கின்றன. பங்களாதேஷ் உள்ளிட்ட ஆசிய நாடுகளிலும் வெளிநாட்டு இருப்புகள் அதிகம் காணப்படும் போது, இலங்கையில் மாத்திரம் இப்படியொரு மோசமானநிலை கோட்டாபய ராஜபக்ஸவின் ஆட்சியில் மாத்திரமே ஏற்பட்டுள்ளது. நாட்டை அழித்துள்ள இந்த அரசாங்கத்தை குறுகிய காலத்துக்குள் வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று குறிப்பிட்டார்.

## “பிரபாகரனுக்கு படிப்பறிவு இல்லை”

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், தமிழ் மக்களின் பிரதிநிதிகள், தனி இராஜ்ஜியம் உள்ளிட்ட வாக்குறுதிகளை வழங்கி பாராளுமன்றத்துக்கு வந்தனர்.

பின்னர் இந்த வாக்குறுதிகளை அவர்கள் நிறைவேற்றவில்லை. இதனாலேயே ஆயுதப் போராட்டம் ஏற்பட்டது.

நாட்டை கைவிட்டு வெளிநாடுக்கு சென்றவரே அன்டன் பாலசிங்கம். அவர் இங்கிலாந்தில் ஒரு தாதியரையே திருமணம் செய்திருந்தார். பாலசிங்கம் கூட படிப்பறிவை கொண்டிருந்தாரா என்பது எனக்கு சந்தேகமே.

பாலசிங்கம் போன்று வெளிநாடுகளில் இருந்தவர்களுக்கு நாட்டில் இனப் பிரச்சினை ஒன்று இருந்தது பயனாக இருந்தது. இவரைப் போன்றவர்கள் வெளிநாடுகளில் குடியுரிமையை பெற்றுக்கொள்ள ஆயுதப் போராட்டங்களை தூண்டினர் எனவும் கூறினார்.

## உறவினருக்கு விளக்கமறியல்

முல்லைத்தீவு, மூங்கிலாறு கிராமத்தில் கடந்த 15 ஆம் திகதி காணாமல் போயிருந்த 13 வயது சிறுமி யோகராசா நிதர்சனா கடந்த 18 ஆம் திகதியன்று சடலமாக மீட்கப்பட்டார்.

பிறப்புறுப்பில் ஏற்படுத்தப்பட்ட பலத்த காயங்கள் காரணமாகவே சிறுமியின் மரணம் ஏற்பட்டுள்ளமை முல்லைத்தீவு சட்ட வைத்திய நிபுணரால் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையின் போது உறுதி செய்யப்பட்டது.

அத்துடன், அச்சிறுமி கர்ப்பிணி என்றும் விசாரணைகளில் கண்டறியப்பட்டது. அதனையடுத்தே, சிறுமியின் உறவினர் ஒருவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## மீனவர் பிரச்சினைகளை தீர்க்க விரைவில் பேச்சு

எல்லை தாண்டி மீன் பிடித்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், இராமேஸ்வரம் மற்றும் தங்கச்சிமடம் பகுதிகளை சேர்ந்த 55 மீனவர்களை, நடுக்கடலில் வைத்து இலங்கை கடற்படையினர் சுற்றி வளைத்து கைது செய்திருந்தனர். நீதிமன்ற உத்தரவின் பேரில், அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தை நடத்தப்படுமென்றும் பேச்சுவார்த்தையில் பங்கேற்கவுள்ள தமிழ்நாடு மற்றும் இலங்கை மீனவ பிரதிநிதிகளின் பெயர் பட்டியலை இந்திய ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சகம் கேட்டிருக்கிறது என்றும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்தத் திகதியில், பேச்சு வார்த்தை நடத்தலாம் என்பதற்கான உத்தேச திகதியை தெரிவிக்குமாறு அரசாங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த பேச்சுவார்த்தையில் பாக்கு நீரிணைப் பிரச்சினை, ஆழ்கடல் மீன்பிடிப்புத் திட்டம் குறித்து விவாதிக்கப்படவிருக்கிறது என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாட்டு மீனவர்களுக்கு இடையேயான பேச்சுவார்த்தை கடைசியாக 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் புதுடெல்லியில் நடைபெற்றது. அதனை தொடர்ந்து 2020 ஆம் ஆண்டு இந்தியா- இலங்கை கூட்டு செயற்குழு கூட்டம் நடத்தப்பட்டது.

தற்போது தமிழ்நாடு மீனவர்கள் கைது செய்யப்பட்டிருக்கும் நிலையில் இரு நாட்டு மீனவர்களுக்கு இடையே விரைவில் பேச்சு வார்த்தை ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிணற்றில் விழுந்து உயிரிழந்த சிறுவனுக்கு கொரோனா

அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில், கொரோனா தொற்றுக்கு உள்ளாகியிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், அவரது சடலத்தை, சுகாதார நடைமுறைகளை பேணி எரியூட்டுவதற்கு சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இன்றும் நாளையும் ஜே.வி.பி ஆர்ப்பாட்டம்

மஹரகம, கம்பஹா, கிரிபத்கொட, இரத்தினபுரி, கேகாலை, மொனராகலை, தம்புள்ள, நுவரெலியா, அனுராதபுரம் மற்றும் கினிகத்ஹேன ஆகிய நகரங்களில் இன்று (23) ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படும்

பாணந்துறை, காலி, அக்குரஸ்ஸ, பதுளை, குருணாகல், புத்தளம், ரிக்கிலகஸ்கட, பூண்டுலோயா, கதுறுவெல மற்றும் திருகோணமலை ஆகிய பிரதான நகரங்களில் நாளையும் (24) இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுமென ஜே.வி.பி அறிவித்துள்ளது.



நிவாரணங்கள் இல்லை என்றால்

# 20 சதவீதத்தால் அதிகரிப்போம்

ஜனவரி 3ஆம் திகதி பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர், பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டுமென அகில இலங்கை மாணவர்களுக்காக போக்குவரத்து சேவை சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அச்சங்கத்தின் தலைவர் ருவன் பிரசாத், "இதற்கு முன்னரும் டீசல் விலை அதிகரிக்கப்பட்டபோதும் நாம் வேன் கட்டணங்களை அதிகரிக்கவில்லை. பெற்றோர்களால் இதனைத் தாங்கிக்கொள்ள முடியாது என்பதாலேயே நாம் அதிகரிக்கப்பட்ட கட்டணங்களை அதிகரிக்கவில்லை. இன்று (23) பாடசாலைகள் மூடப்பட்டு மீண்டும் ஜனவரி 03ஆம் திகதி பாடசாலைகள் திறக்கப்படவுள்ளன. எனவே, இடைப்பட்ட இந்த 10 நாள்களுக்குள் எங்களுக்கு நிவாரணங்கள் வழங்க வேண்டும். குறிப்பாக, கூப்பன் முறை ஒன்றையாவது அரசாங்கம் எங்களுக்காக நடைமுறைப்படுத்த வேண்டும்" என்றார்.

அரசாங்கம் நிவாரணங்களை வழங்கத் தவறும் பட்சத்தில் ஜனவரி 03ஆம் திகதி முதல் பாடசாலை மாணவர்களுக்கான வான் கட்டணங்கள் 20 சதவீதத்தால் அதிகரிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.





## "என்ன நடக்கும் என்பது தெரிந்தே சொல்கிறார்கள்"

சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றால் என்ன நடக்கும் என்பது எதிர்க்கட்சிக்கு நன்கு தெரியுமெனத் தெரிவித்த மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், இதனாலேயே அங்கு செல்ல வேண்டுமென அரசாங்கத்துக்கு அவர்கள் அழுத்தம் கொடுக்கின்றனர் என்றார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், சர்வதேச நாணய நிதியத்திடம் கடனைப் பெற்றுக்கொள்வதாக இருந்தால், சில நிபந்தனைகளை நாம் பின்பற்ற வேண்டிவரும். குறிப்பாக, அரச ஊழியர்களின் சம்பளத்தை குறைக்க வேண்டும். ஓய்வூதியத்தை குறைக்க வேண்டும் உள்ளிட்ட நிபந்தனைகள் அவர்கள் நிச்சயமாக முன்வைப்பார்கள். சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றால் எம்மால் சுயாதீனமான தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது. அவர்கள் கூறுவதையே செய்ய வேண்டும். கடந்த நல்லாட்சி அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றது. அதன் பிரதி பலன்களை நாம் இப்போது அனுபவிக்கிறோம் எனவும் கூறினார்.

## பேச்சுக்கு எம்மை அழைக்கவில்லை

போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவுடன் பஸ் தொழிற்சங்கங்கள் பேச்சுவார்த்தைகளை நேற்று (22) முன்னெடுத்திருந்த போதிலும், இப்பேச்சுவார்த்தைக்கு பிரதான தனியார் பஸ் தொழிற்சங்கள் இரண்டுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அச்சங்கத்தின் பொதுச்செயலாளர் அஞ்சன பிரன்ஜித், அரசாங்கத்துடன் நெருக்கமாக இருக்கும் சில பஸ் தொழிற்சங்கங்களுக்கு மட்டுமே இக்கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பிரதான தொழிற்சங்கங்களான அகில இலங்கை தனியார் பஸ் ஊழியர்கள் சங்கம், தென் மாகாண பஸ் உரிமையாளர்கள் சங்கம் ஆகிய இரண்டுக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை. பஸ் உரிமையாளர்கள் சங்கம் என்கிற வகையில் நாம் பஸ் பட்டணங்களை அதிகரிக்க வேண்டுமெனக் கோரவில்லை. நாட்டில் 18 ஆயிரம் தனியார் பஸ்கள் உள்ளன. அதில் 17 ஆயிரம் பஸ்கள் தற்போது போக்குவரத்தில் ஈடுபடுகிறன. எனவே, இந்த பஸ்களுக்கு பழைய விலையில் எரிபொருளை வழங்குவதற்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்றே கோருகிறோம் என்றார்.




## துப்பாக்கியுடன் ஒருவர் கைது

மினுவாங்கொட, உன்னாருவ பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாண குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கு அமையவே மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் ரி- 56 ரக துப்பாக்கி, அதற்குப் பயன்படுத்தக்கூடிய துப்பாக்கி 30 ரவைகளுடன் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

> **41 வயதுடைய சந்தேக நபர் மினுவாங்கொட பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும், இவர் பாதாள உலககோஷ்டி உறுப்பினர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்**

இதேவேளை கைது செய்யப்பட்ட 41 வயதுடைய சந்தேகநபர் மினுவாங்கொட பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும், இவர் பாதாள உலககோஷ்டி உறுப்பினர் எனவும் பல்வேறு குற்றச் செயல்களுடன் இவருக்கு தொடர்புள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.





## புதிதாக 17 இராஜதந்திரிகள்

புதிதாக நியமனம் பெற்று இலங்கைக்கு வருகை தந்துள்ள 11 தூதுவர்கள், ஆறு உயர்ஸ்தானிகர்களும் தங்களுடைய நற்சான்றுப் பத்திரங்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளனர்.

ஜனாதிபதி மாளிகையில் வைத்து நேற்று முன்தினம் (21) கையளித்துள்ளனர்.

எகிப்து, இந்தோனேசியா, ஜோர்தான், கொரிய ஜனநாயக மக்கள் குடியரசு, ஹங்கேரியா, மொரிடானிய, தூனிசியா, ஆர்ஜென்டினா, டொமினிக் குடியரசு, ஸ்பெயின், ஸ்லோவேனியா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் இவ்வாறு நற்சான்றுப் பத்திரங்களை கையளித்துள்ளார்.

சியெரா லியோன், ருவாண்டா, பொஸ்ட்வானா, மோல்டா, கயானா குடியரசு, நைஜீரியா ஆகிய நாடுகளின் புதிய உயர்ஸ்தானிகர்களும் தங்களுடைய நற்சான்றுப் பத்திரங்களை கையளித்துள்ளனர்.



## 'ஒரே நாடு, ஒரே சட்டம்' சாத்தியமில்லை



பல்லின மக்களைக் கொண்ட இலங்கைக்கு, 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்பது நடைமுறைக்கு சாத்தியமற்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நாட்டிலுள்ள ஒவ்வோர் இனங்களுக்கும் அந்தந்த இனங்களுக்குரிய சம்பிரதாயங்களின்படி வரலாற்று ரீதியாக சில சட்டங்கள் உள்ளன. எனவே அனைவருக்கும் ஒரு சட்டம் என இவற்றை ஒன்றிணைக்க முடியாது என்றார்.

அரசியல்வாதிகளுக்கு நடைமுறைப்படுத்தப்படும் சட்டம் கீழ்மட்ட மக்களுக்கு நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. எல்லோருக்கும் நியாயம் கிடைக்க வேண்டும். 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்று கூறும் அரசாங்கம் இதனையே செய்யுமென நான் எதிர்பார்த்தேன்.

ஞானசாரர் போன்றவர்கள் தொடர்ந்து நாட்டில் இனவாதத்தை பரப்பிக்கொண்டிருந்தார்கள். இதனால் முஸ்லிம்களில் சிலர் இதற்குப் வேறு வழியில் பதிலளித்தார்கள். ஒவ்வோர் இனத்துக்கும் வரலாற்று ரீதியில் வெவ்வேறான சட்டங்கள் காணப்படுகின்றன எனவும் கூறினார்.

குறிப்பாக முஸ்லிம், சிங்களவர்களுக்கு தனித்தனியாக உள்ள சில சட்டங்களை ஒன்றிணைத்து ஒரே சட்டமாகக் கொண்டுவர முடியாது. எனவே ஒரே சட்டம் என்பது நடைமுறையில் எந்தளவுக்கு சாத்தியம் என்பது தெரியவில்லை.

## சிறுமியை விற்ற உறவினர் கைது



14 வயதான சிறுமியை நீண்ட நாள்களாக, விபசாரத்துக்காக விற்பனை செய்து, அதில் கிடைக்கும் பணத்தில் சுகபோகமான வாழ்க்கையை நடத்திவந்த, அச்சிறுமியின் உறவுக்கார பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மருதானை பொலிஸாருக்கு கிடைத்த மிக இரகசியமான தகவலை அடுத்தே, உறவுக்காரப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார். மீட்கப்பட்ட சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறுமியின் பெற்றோரை ஏமாற்றி, தன்னுடைய வீட்டுக்கு அழைத்து வந்த உறவுக்கார பெண், அச்சிறுமியை பலருக்கும் பணத்துக்கு விற்றுள்ளார்.

கிராண்ட்பாஸ் பகுதியில் வசிக்கும் சந்தேகநபரான அப்பெண், மருதானை பிரதேசத்திலுள்ள சிறுமியின் வீட்டுக்குச் சென்று, தான் தனியாக இருப்பதால், துணைக்கு சிறுமியை அழைத்துச் செல்வதாகக் கூறி, சிறுமியை கிராண்ட்பாஸ் பகுதிக்கு அழைத்துச் சென்று இவ்வாறு விபசாரத்துக்கு விற்றுள்ளார்.

இரண்டு, மூன்று நாள்கள் தன்னுடைய வீட்டில் தங்க வைத்துக்கொள்வதாக, அச்சிறுமியின் பெற்றோரிடம் கூறிவிட்டு அழைத்துவரும் சந்தேகநபரான அப்பெண், வர்த்தகர்களுக்கு தலா, 50 ஆயிரம் ரூபாய்க்கு விற்று வந்துள்ளமை விசாரணைகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது.

> **இரண்டு, மூன்று நாள்கள் தன்னுடைய வீட்டில் தங்க வைத்துக்கொள்வதாக, அச்சிறுமியின் பெற்றோரிடம் கூறிவிட்டு அழைத்துவந்து வர்த்தகர்களுக்கு தலா, 50 ஆயிரம் ரூபாய்க்கு விற்றுள்ளார்**

12 வயதில் இருந்தே, அச்சிறுமியை இவ்வாறு இரண்டு வருடங்களாக, விபசாரத்தில் ஈடுபடுத்தியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சிறுமியால் வழங்கப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில், பலரும் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபரான அப்பெண்ணுக்கு 32 வயதாகும். இறுதியாக சிறுமியுடன் மீட்கப்பட்ட சந்தேநபருக்கு 38 வயதாகும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இவ்விருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவென பொலிஸார் தெரிவித்தனர்.



## புதிய நியமனங்கள்

ஊடக, விவசாய அமைச்சுகளுக்கு இரு செயலாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனவரி முதலாம் திகதி முதல் அமலுக்கு வரும்வகையில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன்பிரகாரம், ஊடக அமைச்சின் செயலாளராக அனுஷ பெல்பிட்ட, விவசாய அமைச்சின் செயலாளராக டீ.எம்.எல்.டி. பண்டாரநாயக்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## புதிய நியமனம்

ஐக்கிய மக்கள் சக்தியின் முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதான அமைப்பாளராக லக்ஷயன் முத்துக்குமாரசுவாமி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதம் எதிர்க்கட்சித் தலைவரால் வழங்கி வைக்கப்பட்டதுடன், இந்நிகழ்வில் ஐக்கிய இளைஞர் சக்தியின் தலைவர் மயந்த திஸாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் ஏரான் விக்கிரமரத்ன, ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி செயலாளர் உமாசந்திர பிரகாஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.



வடக்கு பிரதேச சபையை

# கூட்டமைப்பு இழந்தது

## திருவுளச்சீட்டு மூலம் தவிசாளரானார் பார்த்தீபன்

■ க. அகரன்

வவுனியா வடக்கு பிரதேச சபையின் ஆட்சியை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இழந்துள்ளதுடன், புதிய தவிசாளராக சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த தர்மலிங்கம் பார்த்தீபன் தெரிவுசெய்யப்பட்டார்.

வவுனியா வடக்கு பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம், சபையில் சமர்ப்பிக்கப்பட்டு, அநேக உறுப்பினர்களின் எதிர்ப்பால் இரு தடவைகள் தோல்வியடைந்திருந்தது.

இதையடுத்து, உள்ளூராட்சி சட்டங்களின் பிரகாரம், புதிய தவிசாளரை தேர்வுசெய்வதற்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது.

குறித்த தேர்தல், வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில், வடக்கு பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில், நேற்று (22) நடைபெற்றது.

இதன்போது, சபையின் 26 உறுப்பினர்களில் 25 உறுப்பினர்கள் சமூகமளித்திருந்தனர். பொதுஜன பெரமுனவின் ஓர் உறுப்பினர் சுகவீனம் காரணமாக சபைக்கு வருகைதரவில்லை.

இதன்போது, சபையின் புதிய தவிசாளர் ஒருவரை தெரிவுசெய்யுமாறு உள்ளூராட்சி ஆணையாளரால் கோரப்பட்டது.

இதன்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பை சேர்ந்த சோ. சத்தியேந்திரன், சுதந்திரக் கட்சியின் த.பார்த்தீபன் ஆகியோரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டன. இருவர் பரிந்துரை செய்யப்பட்டமையால் தவிசாளர் தெரிவு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

வாக்கெடுப்பை பகிரங்க வாக்கெடுப்பாக நடத்துவதா அல்லது இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவுசெய்வதா என்று ஆணையாளர் கோரியிருந்தார்.

இந்நிலையில் 12 உறுப்பினர்கள் பகிரங்க வாக்கெடுப்புக்கும் 13 உறுப்பினர்கள் இரகசிய வாக்கெடுப்பை நடத்துமாறும் இணக்கம் தெரிவித்தனர்.

குறிப்பாக உதயசூரியன் சின்னத்தில் தமிழர் விடுதலை கூட்டணி சார்பாக போட்டியிட்ட பெண் உறுப்பினர் ஒருவரும் இரகசிய வாக்கெடுப்பை கோரியிருந்தார்.

இதனையடுத்து, இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. வாக்கெடுப்பில் தவிசாளர்களாக பரிந்துரை செய்யப்பட்ட இருவருக்கும் தலா 12 வாக்குகள் கிடைக்கப்பெற்றிருந்தது. ஒரு வாக்கு எவருக்கும் வழங்கப்படாமல் நிராகரிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, திருவுளச்சீட்டு மூலம் தவிசாளரை தேர்வுசெய்வதாக ஆணையாளர் அறிவித்தார்.

இதனையடுத்து, சபை முன்னிலையில் இருவரது பெயரும் திருவுளச்சீட்டில் எழுதப்பட்டு தெரிவுசெய்யப்பட்டது. அதன் மூலம் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த த.பார்த்தீபன் தவிசாளராக தேர்வுசெய்யப்பட்டார்.

திருகோணமலையில்

# மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

■ தீஷான் அஹமட், எஸ்.எம்.றனீஸ்






திருகோணமலை கரையை அண்டிய பகுதியில் தூண்டில் மற்றும் சிறு வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழில் செய்யும் மீனவர்கள், திருகோணமலை மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியில் நேற்று (22) காலை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வேறுபகுதி மீனவர்கள் வருகைதந்து திருகோணமலை கரையோரங்களில் சட்டவிரோதமாக பெரிய வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதால் கரையை அண்டிய பகுதியில் தூண்டில்களையும் சிறிய வலைகளையும் பயன்படுத்தி மீன்பிடிக்கும் தமது தொழிலும் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

இது விடயத்தில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு கரைகளில் மீன்பிடியில் ஈடுபடுவோரை தடை செய்ய வேண்டுமெனவும் அனுமதிக்கப்பட்ட பகுதியில் அவர்கள் மீன்பிடிப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் இதன்போது கோரிக்கை விடுத்தனர்.

இதன்பின் ஆர்ப்பாட்ட இடத்துக்கு வருகை தந்த பொலிஸார், மீனவர்களோடு கலந்துரையாடி ஆர்ப்பாட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

இக்கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட மீனவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

ஆய்வு மாநாட்டில்

# ஆய்வுகளை சமர்ப்பிக்க முடியும்

■ க. அகரன்




வவுனியா பல்கலைகழகத்தின் வியாபாரக் கற்கைகள் பீடத்தால் நடைமுறைப்படுத்தப்பட உள்ள ஆய்வுமாநாட்டில் ஆய்வுகளை சமர்ப்பிக்குமாறு, வவுனியா பல்கலைகழகம் கோரியுள்ளது. இது தொடர்பாக வவுனியா பல்கலைகழகத்தின் வியாபார கற்கைள் பீடத்தால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே, இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த குறிப்பில், வவுனியா பல்கலைக்கழக வியாபாரக்கற்கைகள் பீடமானது 4வது வியாபாரக் கற்கைகள் ஆய்வு மாநாட்டினை நடத்துவுள்ளது. குறித்த மாநாடு இம்முறை 'பெரும்பரவல் தொற்று நோய்க்கான வியாபாரத் தயார் நிலை முன்னுதாரண மாற்றத்துக்கான நேரம்' என்ற ஆய்வுக் கருப்பொருளில் 2022ஆம் ஆண்டு ஆடி மாதம் 4ஆம், 5ஆம் திகதிகளில் நடத்த தீர்மானித்திருக்கின்றது.

தெரிவுசெய்யப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் வவுனியா பல்கலைக்கழக வியாபார முகாமைத்துவ இதழில் பிரசுரிக்கக்கூடிய சந்தர்ப்பமானது பிரத்தியேகமாக வழங்கப்படுகின்றது. ஆய்வாளர்கள் ஆய்வுக் கட்டுரையை மார்ச் மாதம் 31ஆம் திகதி 2022ஆம் ஆண்டு வரை சமர்ப்பிக்க முடியும்.

ஆய்வுமாநாட்டில் முதல் முறையாக உலகப் புகழ் வாய்ந்த பேராசிரியர் மல்கொம் கூப்பர், கலாநிதி நைகெல் வில்லியம்ஸ், பேராசிரியர் ரவிசங்கர் ஆகியோர் முதன்மைப் பேருரைகளை வழங்கவிருக்கின்றனர்.

இந்த ஆய்வு மாநாட்டுக்கு பணியாளர் மேலாண்மை பட்டயநிறுவனம், சான்றளிக்கப்பட்ட மேலாண்மைக் கணக்காளர்கள், இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம், இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம், திட்ட மேலாண்மை நிறுவனம் ஆகியோர் பங்காளர்களாக விளங்குகின்றனர் எனவும், அக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மாநாடு தொடர்பான மேலதிக தகவல்களை https://fbs.vau.ac.lk/rcbs2022/ என்ற இணையத்தளத்தில் அல்லது இந்த ஆய்வு மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர் யூட் லியோனிடம் (077-3400855) பெற்றுக்கொள்ள முடியும்.



## நினைவேந்தல் நிகழ்வு...

இலங்கை முதலுதவிச் சங்கம் – இலங்கை இந்து சமயத் தொண்டர் சபையின் ஸ்தாபகரும் பிரதம ஆணையாளருமான அமரர் நாகேந்திரம் போஜனின் பத்தாவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, அண்மையில், கிளிநொச்சி, விசுவமடு பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. (படப்பிடிப்பு: எஸ். தில்லைநாதன்)





# யாழ். பல்கலைக்கழக பணியாளர்களுக்கு தடுப்பூசி

■ எஸ்.நிதர்ஷன்



வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டலில், நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பணியாளர்களுக்கான மூன்றாவது கொரோனா தடுப்பூசி ஏற்றல், நேற்று (22) காலை ஆரம்பமாகியது.

கடந்த ஜூன் மாதம் 02, 03ஆம் திகதிகளில் முதலாவது சினோபோஃம் தடுப்பூசியையும், ஜூலை மாதம் 07ஆம் இரண்டாவது சினோபோஃம் தடுப்பூசியையும் பெற்றுக்கொண்ட பல்கலைக்கழகப் பணியாளர்களுக்கு, மூன்றாவது தடுப்பூசியாக பைசர் பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்பட்டது.

வள்ளிபுனம் மக்களின்

# குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு

■ செ.கீதாஞ்சன்



இலங்கை கடற்படையின் தொழில்நுட்பம் மற்றும் மனிதவள பங்களிப்புடன் சுகாதார போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் 1.5 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் புதுக்குடியிருப்பு - வள்ளிபுனம் கிராமத்தில் கடற்படையினரால் நிர்மாணிக்கப்பட்ட சுத்திகரிப்பு குடிநீர் திட்டம், நேற்று (22) மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச உதவி செயலாளர் இராணுவ அதிகாரி, கடற்படை அதிகாரி, கிராமசேவையாளர், வள்ளிபுனம் பாடசாலை அதிபர், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் கௌரவிக்கப்பட்டனர்.

குடிநீர் திட்டத்தின் பெயர் பலகையை, கடற்படை அதிகாரியும் கட்டடத்தை புதுக்குடியிருப்பு பதில் பிரதேச செயலளரும் திறந்து வைக்க, குடிநீர் இயந்திரத்தை இராணுவ அதிகாரி ஆழியை அழுத்தி தொடக்கி வைத்தார்.

தொடர்ந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விருந்தினர்களுக்கு வழங்கிவைக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் குடிநீர் பிரச்சினையால் அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டு வருவதுடன், அதிகளவான சிறுநீரக நோயாளர்களும் காணப்படுகின்றார்கள். இந்நிலையில், வ இந்த குடிநீர் திட்டம் ஊடாக கிராமத்தில் உள்ள மக்களின் குடிநீர் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டு உள்ளது.

சிறுமி உயிரிழப்பு:

# சந்தேகநபருக்கு விளக்கமறியல்

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, மூங்கிலாறு கிராமத்தில், சிறுமி ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை (வயது 34), ஜனவரி 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றம், நேற்று முன்தினம் (21) உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், சிறுமியின் உயிரிழப்பு தொடர்பிலான மேலதிக விசாரணைகள் மற்றும் வாக்குமூலம் பெறும் நடவடிக்கையில், புதுக்குடியிருப்பு பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

# 293 வீதி விபத்துகளில் 65 மரணங்கள் பதிவு

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாண்டில் 293 வீதி விபத்துகளில் 65 மரணங்கள் பதிவாகியுள்ளன. இது கடந்த ஆண்டிலும் பார்க்க குறைவடைத்து காணப்படுவதாக மாவட்ட போக்குவத்துப் பொலிஸ் பிரிவுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2020ஆம் ஆண்டு ஜனவரி 01ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் மாவட்டத்திலுள்ள 13 பொலிஸ் பிரிவுகளிலும் 336 வீதி விபத்துகள் இடம்பெற்றுள்ளன.

இவ்விபத்துகளில் சிக்கி சிறிய காயமடைந்தோர் 113 பேரும், கடுமையான காயமடைந்தோர் 119 பேரும் அடங்குவதுடன், சொத்துகளுக்கான சேதம் 20 பதிவாகியுள்ளதுடன் 64 இறப்புகளும் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை, இவ்வாண்டு ஜனவரி 01ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 15ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மாவட்டத்திலுள்ள 13 பொலிஸ் பிரிவுகளிலும் 293 வீதி விபத்துகள் இடம்பெற்றுள்ளன.

இவ்விபத்துகளில் சிக்கி சிறிய காயமடைந்தோர் 105 பேரும், கடுமையான காயமடைந்தோர் 99 பேரும் அடங்குவதுடன், சொத்துகளுக்கான சேதம் 24 பதிவாகியுள்ளதுடன் 65 இறப்புக்களும் இடம்பெற்றுள்ளன.

இவற்றில் கல்குடா பொலிஸ் பிரிவில் 2020ஆம் ஆண்டு 5 விபத்துகளில் 02 மரணங்கள் இடம்பெற்றிருந்ததுடன் இவ்வாண்டு ஒரேயொரு விபத்து சிறிய காயங்களுடன் பதிவாகியுள்ளது.

கொக்கட்டிச்சோலை, வெல்லாவெளி, மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுகளிலும் குறைவாக வீதி விபத்துகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



உப்போடை

# வாவியில் ஆணின் சடலம் மீட்பு

■ வா.கிருஸ்ணா, கனகராசா சரவணன்

மட்டக்களப்பு தலைமையப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உப்போடை வாவிப் பகுதியில் ஆண் ஒருவரின் சடலம், நேற்று (22) காலை மீட்கப்பட்டுள்ளது.

உப்போடையில் உள்ள பிரபல ஹோட்டலுக்கு அருகாமையில் உள்ள வாவி பகுதியிலிருந்தே, மீனவர்கள் வழங்கிய தகவலையடுத்து, இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலம் உருக்குலைந்துள்ளமையால் அடையாளம் காணப்படாத நிலையில் காணப்படுகின்றது.

நீதிமன்ற உத்தரவைப் பெற்று பிரேத பரிசோதனைக்கு வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக தெரிவித்த மட்டக்களப்பு பொலிஸார், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, மலசலக்கூடத்தின் தரை சறுக்கி வீழ்ந்தமையால் 44 வயதுடைய ஆண் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவமும், ஜெயந்திபுரம் பகுதியில் நேற்று (22) காலை இடம்பெற்றுள்ளமை குறிப்பித்தக்கது.



சட்டவிரோத மீன்பிடியை தடுத்து நிறுத்த

# விசேட சுற்றிவளைப்புகள்

■ எஸ்.எம்.றனீஸ்

திருகோணமலை மாவட்ட மீனவர்களின் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை கருத்திற்கொண்டு, மாவட்டச் செயலாளர் சமன் தர்சன பாடிகோராளவின் ஏற்பாட்டில், இது தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம், மாவட்டச் செயலகத்தில் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமாகிய கபில நுவன் அத்துகோரல தலைமையில் நேற்று (22) நடைபெற்றது.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை சட்டத்தின் முன் நிறுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, உரிய அதிகாரிகளுக்கு, பாராளுமன்ற உறுப்பினர் இதன்போது அறிவுரை வழங்கினார்.

தடைசெய்யப்பட்ட சுருக்குவலை, டைமனைட் பாவனை காரணமாக மீன் வளம் அழியக்கூடிய வாய்ப்பு உள்ளது. இதன்காரணமாக, தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படும். துறைசார் அதிகாரிகள் சட்டவிரோத மீன்பிடியைத் தடுக்க நடவடிக்கை எடுத்தாலும் ஒரு சில விசமிகள் சூட்சுமமான முறையில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். இவற்றை தடுத்து நிறுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, மீனவர்கள் வேண்டிக் கொண்டனர். இதற்கிணங்க, நேற்று (22) முதல் இரண்டு வாரங்கள் வரை சட்டவிரோத மீன்பிடியை தடுத்து நிறுத்த விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

முப்படையும் பொலிஸாரும், உரிய திணைக்கள தலைவர்களும் இணைந்து இச்சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளவுள்ளனர். மேலும், இது தொடர்பில் உரிய பிரதேசங்களில் மீனவ சங்கங்களுக்குத் தெளிவுபடுத்துவது எனவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.



மீனவ சங்க

# கட்டடம் உடைப்பு; ஒருவர் கைது

■ ஹஸ்பர்

கிண்ணியா அல் ஹிதாயா மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டடத்தின் ஜன்னல் கண்ணாடிகள் உடைக்கப்பட்டு, அங்கிருந்த பொருள்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் ஏ.எச்.பைரூஸ் தெரிவித்தார்.

நேற்று (22) அதிகாலை இடம்பெற்றுள்ள இச்சம்பவம் குறித்து கிண்ணியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேற்படி சங்க நிர்வாக தெரிவு அண்மையில் இடம்பெற்ற நிலையில் இந்த நாசகார வேலைகளை செய்தவர்களைக் கண்டு பிடிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் உள்ள மீனவ சங்க கட்டடமே இவ்வாறு சேதமாக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் ஒருவரை கைது செய்துள்ள கிண்ணியா பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வைத்தியசாலை இருந்தும் வளங்கள் இன்மையால்

# நோயாளர்கள் அவதி

■ துவாரகஷான்

நுவரெலியா மாவட்டத்தில் 17 தோட்டங்களைக் கொண்ட டயகம பிரதேசத்தில் 09 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இம்மக்களின் சுகாதார நடவடிக்கைகளுக்காக, வெள்ளையர்களின் காலத்தில் டயகம பிரதேசத்தில் வைத்தியசாலை ஒன்று நிர்மாணிக்கப்பட்டு அதனூடாக மக்களுக்கு சுகாதார சேவைகள் வழங்கப்பட்டு வந்த நிலையில், குறித்த வைத்தியசாலையை 90ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசாங்கம் பொறுப்பேற்றது. அதன்பின்னர் புதிய கட்டடம் ஒன்றும் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளது.




எனினும் வைத்தியசாலையின் அபிவிருத்தியை மேலும் முன்னெடுக்க போதியளவான காணி வசதிகள் இல்லாமல் இருப்பது அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு பெரும் தடையாகவே இருப்பதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

அத்துடன், 5 தாதியர்கள் இருக்க வேண்டிய இடத்தில் தாதியொருவர் மாத்திரமே பணியில் ஈடுபட்டு வருவதால் நோயாளர்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளதுடன், இந்த வைத்தியசாலைக்கென அம்பியூலன்ஸ் வண்டியொன்று இன்மையும் பாரிய குறைபாடாகக் காணப்படுகின்றது.

எனவே, இப்பிரதேச மக்களின் நலன் கருதி இந்த வைத்தியசாலையை தரம் உயர்த்தி தேவையான மனித வளங்கள், பௌதீக வளங்களை வழங்கி, சிறந்த சுகாதார சேவைகளை மக்களுக்கு வழங்க சகல தரப்பினரும் முன்வர வேண்டும் என பிரதேசவாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.



வைத்தியர்களின் பணி பகிஸ்கரிப்பால்

## தனியார் சிகிச்சை நிலையங்களில் நீண்ட வரிசை

■ ரஞ்சித் ராஜபக்ஸ

அரச வைத்திய அதிகாரிகள் கடந்த 3 நாள்களாக முன்னெடுத்து வரும் பணி பகிஸ்கரிப்பு காரணமாக, நோயாளர்கள் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதற்கமைய ஹட்டன் உள்ளிட்ட பெருந்தோட்டங்களை அண்மித்தவர்கள், பிரதான நகரங்களிலுள்ள தனியார் சிகிச்சை நிலையங்களை நாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் பிரதான நகரங்களிலுள்ள தனியார் சிகிச்சை நிலையங்களில் நீண்ட வரிசைகளைக் காணக் கூடியதாகவிருந்தது.

மூத்த தொழிற்சங்கவாதிகள் கௌரவிக்கப்பட்டமை

## தன்னலமற்ற சேவைக்கான கௌரவமாகும்

■ ஆ.புலியரசன்

உழைக்கும் பாட்டாளி தொழிலாளர் வர்க்கத்தின் நலனுக்காக தமது வாழ்நாளை அர்ப்பணித்து செயற்படும் மூத்த தொழிற்சங்கத் தலைவர்களை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகைக்கு அழைத்து, பாராட்டி, விருது வழங்கியமை, அவர்களது தன்னலமற்ற சேவைக்குக் கிடைத்த மகத்தான கௌரவமாகும். இதை தான் வரவேற்கின்றேன் என பதுளை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இ.தொ.கா முக்கியஸ்தருமான டி.வி. சென்னன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவித்த அவர், தொழிலாளர்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகளை வென்றெடுக்க இரவு, பகல் பாராது தங்கள் குடும்ப வாழ்க்கையை மறந்து மலையகத்தில் தொழிற்சங்கப் பணி செய்தனர்.

தொழிலாளர்களின் உரிமைப் போராட்டங்களின் போது, தொழிலாளர்கள் மூன்று வேளையும் பட்டினி கிடந்தால் அவர்களுடன் சேர்ந்து இவர்களும் ஒருவேளையாவது பட்டினி இருந்து போராடி உரிமைகளை வென்றனர். இப்போதுள்ள தலைவர்களைப் போல, தமது குடும்பப் பொருளாதாரத்தை வளப்படுத்திக் கொள்ள முனையவில்லை.

அவர்கள் இன்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்தவாறே தொழிற்சங்கப் பணியை உயிர் மூச்சாகக் கருதி செயற்படுகின்றனர். ஆனால், இன்றைய நிலைமை வேறு தொழிற்சங்கத் தலைவர்களாக இருப்பவர்கள் பட்டு பிதாம்பரங்களுடன், குடை பிடிக்கவும் தங்களுக்கு உதவி செய்யவும் பரிவாரங்களை அழைத்து வருகின்றார்கள். உணர்வு ரீதியான போராட்டங்கள் காட்டிக் கொடுக்கப்படுகின்றன. இதனால் தொழிலாளர்களை கம்பனிகள் அடக்கியாளும் நிலை உருவாகி வருகின்றது. இந்நிலை மாற தொழிற்சங்கத் தலைவர்கள் கடந்த காலப் போராட்ட வரலாறுகளைத் திரும்பிப் பார்க்க வேண்டும் என்றார்.



## சேவை நலன் பாராட்டு விழா



லுனுகலை ஸ்ரீ இராமகிருஷ்ண கல்லூரியின் முன்னாள் அதிபர் து. இராஜரட்ணத்தின் சேவை நலன் பாராட்டு விழா, பாடசாலையின் அதிபர் எஸ். தியாகசுந்தரத்தின் நெறிப்படுத்தலின் கீழ் ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பில் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைப்பெற்றது. (சுரேந்திரன்)





யுகோலெண்ட் தோட்டத்திலுள்ள

## பாடசாலை வகுப்பறை புனரமைப்பு

யுகோலெண்ட் தோட்டத்திலுள்ள பாடசாலை வகுப்பறையை புனரமைத்துக்கொடுக்க பிரதமரின் இணைப்பு செயலாளர் செந்தில் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அந்தப் பாடசாலை கூரை சேதமடைந்து அதிக மழை காலப்பகுதியில் மாணவர்கள் வகுப்பறையில் அமர முடியாத நிலைமை காணப்பட்டது.

இது தொடர்பில் செந்தில் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து, இப்பாடசாலைக்கான சீர்திருத்தப்பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கித்துள் மரத்திலிருந்து விழுந்தவர் மரணம்

■ நவி

கலஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெல்தோட்டை, நாராங்ஹின்ன பகுதியில், மரத்திலிருந்து கீழே விழுந்த குடும்பஸ்தர் பலியாகியுள்ளார்.

இரு பிள்ளைகளின் தந்தையான 57 வயதான இராமையா சித்ரவேல் என்பவரே இவ்வாறு பலியாகியுள்ளார்.

கித்துள் மரமொன்றில் நேற்றுமுன்தினம் (22) மதியம் ஏறிய இவர், திடீரென தவறி கீழே விழுந்துள்ளார். இதனையடுத்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்தார்.

இது தொடர்பான விசாரணைகளை கலஹா பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

மலையகத்திலும்

## அடுப்பு வெடிப்புகள் தொடர்கின்றன

■ கே.சுந்தரலிங்கம், எம். கிருஸ்ணா

மலையகத்தில் இருவேறு இடங்களில் சமையல் எரிவாயு அடுப்புகள் இரண்டு வெடித்துள்ளன.

ஹட்டன், ஹிஜிராபுர பகுதியில் நேற்றுமுன்தினம் (21) இரவு 8.10 மணியளவில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியுள்ளது. இந்த வெடிப்பு சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படாத போதிலும் அடுப்பு முற்றாக சேதமடைந்துள்ளது. சமையல் எரிவாயு சிலிண்டர், 16 நாள்களுக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை டயகம வெஸ்ட், நட்போன் தோட்டத்தில் தனி குடியிருப்பு ஒன்றில் நேற்றுமுன்தினம் (21) காலை எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது என டயகம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



தாவரத் திசு வளர்ப்பு நிலையத்துக்கு

## ஊவா மாகாண ஆளுநர் விஜயம்

■ ராமு தனராஜா

பண்டாரவளை, பிந்துனுவெவயில் அமைந்துள்ள தாவரத் திசு வளர்ப்பு நிலையம் மற்றும் காளான் வித்து உற்பத்திப் பிரிவுகளை மேலும் அபிவிருத்தி செய்ய முன்னெடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய, ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் குறித்த நிலையத்துக்கு கள ஆய்வு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

ஊவா மாகாண விவசாயத் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் குறித்த நிலையத்தில் காணப்படும், சேதனப் பசளையைப் பயன்படுத்துகின்ற மாதிரி பண்ணையைப் பார்வையிட்ட ஆளுநர், அங்கு இடம்பெறும் சேதனப் பசளை உர உற்பத்தி உள்ளிட்ட சேவைகளை மேலும் விரிவுபடுத்த முன்னெடுக்க வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் அதிகாரிகளுடன் கலந்துரையாடியதுடன், அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டிய முறைகள் தொடர்பிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

வாழை, மா உள்ளிட்ட பழவகைகள், மலர்ச் செடிகளின் திசு வளர்ப்பு மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகஸ்தர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல், மாகாண விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் நடைமுறை ரீதியான அறிவை வழங்குதல் உள்ளிட்ட பல சேவைகள் இந்த நிலையத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த விஜயத்தில் மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஆர்.எம். டி.பி ஹதியால்தெனிய, மாகாண விவசாயப் பணிப்பாளர் உட்பட நிலையத்தின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.



தொ.தே.ச உறுப்பினர்கள் மூவர்

## அரவிந்தவை அரவணைத்தனர்

■ ஆ.ரமேஸ்

தொழிலாளர் தேசிய சங்கத்தின் இராகலை பிரதேச உறுப்பினர்கள் மூவர், பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் தலைமையிலான, ஐக்கிய தொழிலாளர் முன்னணியில் நேற்று முன்தினம் (21) மாலை உத்தியோகபூர்வமாக இணைந்து கொண்டனர்.

ஐக்கிய தொழிலாளர் முன்னணியின், உடப்புஸ்சலாவை பிரதேச மக்கள் சந்திப்பு நிகழ்வு முன்னணியின் அமைப்பாளர் நவா மற்றும் நிர்வாக பொறுப்பதிகாரி மதிவாணன் ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது வருகை தந்திருந்த ஐக்கிய தொழிலாளர் முன்னணியின் தலைவர் அ.அரவிந்தகுமாரின் முன்னிலையில், தாம் உத்தியோகபூர்வமாக இணைந்து கொண்டதாக வலப்பனை பிரதேச சபை உறுப்பினர்களான பெருமாள் சண்முகம் செல்வந்தன் பிரதீபன், பி.செல்வகுமார் ஆகியோர் தெரிவித்தனர்.

எரிபொருள் விலையேற்றத்தால்

## மாற்றுத்தொழிலை நாடும் ஓட்டோ சாரதிகள்

■ கே.சுந்தரலிங்கம்

எரிபொருள்களின் விலை நேற்று முன்தினம் (21) நள்ளிரவு முதல் திடீரென அதிகரிக்கப்பட்டதால், தற்போது ஓட்டோ தொழிலைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக தங்களுடைய வாழ்வாதாரத்துக்காக மாற்று தொழிலுக்கு செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாக மலையக பகுதியில் ஓட்டோ செலுத்தி வாழ்வாதாரத்தை நடத்தும் ஓட்டோ சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

மலையகத்தில் இன்று ஆயிரக்கணக்கான இளைஞர்கள், முதியோர் தங்களுடைய வாழ்வாதாரத்துக்காக ஓட்டோ சாரதிகளாகப் பணிபுரிகின்றனர்.



இந்நிலையில், நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்றால் அத்தியாவசியப் பொருட்கள் விலையும் பலமடங்காக உயர்ந்துள்ள நிலையில், தற்போது எரிபொருட்களின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

எனவே தமது பொருளாதாரமும் பாரிய அளவில் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளதாகத் தெரிவிக்கும் இவர்கள், எரிபொருள் விலையேற்றத்துக்கு ஏற்ப ஓட்டோ கட்டணத்தை அறவிட முடியாத நிலை இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேலதிக கட்டணத்தை அறவிட்டால் சவாரி செய்பவர்கள் வர மறுக்கின்றனர். இதனால் எங்களுக்கு மாற்று தொழிலொன்றை தேடிச்செல்ல வேண்டிய நிலையே உருவாகியிருப்பதாக ஓட்டோ சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

# பண்டிகை காலமென்பதால் இன்னும் விழிப்பாய் இருங்கள்

இரண்டொரு வருடங்களுக்குப் பின்னர், பண்டிகைகளை வீட்டுக்கு வெளியே, குடும்பமாகச் சென்று கொண்டாடும் அளவுக்கு, இவ்வருட இறுதி அமைந்திருக்கிறது என்பதையிட்டு, சகலரும் மகிழ்ச்சியடைய வேண்டும். அந்த மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கப்போய், அதுவே மீண்டுமொரு பேராபத்துக்கு வழிசமைத்து விட்டுவிடக்கூடாது என்பதையிட்டு சகலரும் கவனமாய் இருக்கவேண்டும்.

சுகாதார வழிகாட்டல்களை முறையாகக் கடைப்பிடிக்காது, சுகாதார தரப்பினரின் அறிவுரைகளை கேளாமையால், அவ்வப்போது கொரோனா அலையலையாய் வந்து, முடக்கத்துக்கு வழிசமைத்தது. இதனால், பல பெருநாள்களை வீடுகளுக்குள் முடங்கிக்கிடந்து கொண்டாட வேண்டிய நிர்ப்பந்தம் சகலருக்கும் ஏற்பட்டிருந்தது.

ஆனால், நாடு திறக்கப்பட்டதன் பின்னர், இரண்டொரு பெருநாள்களைக் கொண்டாட முடிந்தது. தற்போது, கிறிஸ்மஸ் பண்டிகையும் 2022 புத்தாண்டு பிறப்பும் நெருங்கி வந்து கொண்டிருக்கின்றன.

குடும்பத்துடன், கடைகடையாய் ஏறியிறங்கி, வீட்டுக்குத் தேவையான பொருட்களை மட்டுமன்றி, புதிய ஆடைகளைக் கொள்வனவு செய்வதில், எந்தக் குடும்பத்துக்குத்தான் மகிழ்வாய் இருக்காது? அந்த மகிழ்ச்சியைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டுமாயின், சுகாதார வழிகாட்டல்களை அச்சொட்டாக கடைப்பிடிக்க வேண்டும்.

இறுதிநேரம் வரையிலும் காத்திருக்காமல், முன்கூட்டியே சென்று தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்தால், தேவையில்லாத நெரிசல்களை தவிர்த்துக்கொள்ளலாம். பண்டிகை வர்த்தகம், களை கட்டியிருக்கிறது. அதேபோல, விலைவாசியும் தலைக்கு மேல் ஏகிறி நிற்கின்றது. எதற்கெடுத்தாலும் எரிபொருளின் விலையேற்றத்தை ஒவ்வொருவரும் தூக்கிப்பிடித்துக்கொள்வர்.

பண்டிகை வியாபாரம் களை கட்டியிருப்பதால், வர்த்தகர்கள் சிலரும் மலிவாக விற்கவேண்டிய பொருட்களைக் கூட, அதிகவிலைக்கு விற்றுத்தீர்க்க முயலக்கூடும். அதேபோல, தரமற்ற பொருட்களும் விற்கப்படலாம். ஆக, ஒவ்வொன்றிலும் விழிப்பாக இருக்கவேண்டும்.

சனநெரிசல்களுக்குள் முடிச்சுமாற்றிகள் ஊடுருவி இருக்கலாம். ஆகையால், பெறுமதியான பொருட்களையும் பணத்தையும் மிகக் கவனமாகக் கையாள வேண்டும். இதற்கிடையே போலி நாணயத்தாள்கள் புழக்கத்தில் உள்ளதாக பொலிஸ் தலைமையகம் எச்சரித்துள்ளது.

பண்டிகை காலத்தில் அவற்றைப் புழக்கத்தில் விடும் நோக்கில், அச்சிடப்பட்ட ஐயாயிரம், 1,000 ரூபாய் பெறுமதியானதான போலி நாணயத்தாள்கள், கிருலப்பனை, பாதுக்கை, களுத்துறை, ரங்கல ஆகிய பிரதேசங்களில் கடந்த வாரத்தில் மீட்கப்பட்டுள்ளன.

நவீன யுகத்தில் எல்லாமே இலத்திரனியல் முறைமைக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. எனினும், ஆயிரம் ரூபாய் பெறுமதிக்கு மேலான கொள்வனவுக்கு, தங்கள் வசமிக்கும் அட்டைகளை (காட்) கொடுப்பது இலகுவானதாய் இருக்கும். அதற்கு குறைந்த தொகைக்கு இலத்திரனியல் முறைமையை பயன்படுத்துவது அவ்வளவுக்கு சாத்தியப்படாது.

ஒருபக்கம், சுகாதார வழிகாட்டல்கள்; மறுபக்கத்தில், இவ்வாறான போலி நாணயத்தாள்கள்; இன்னொரு பக்கத்தில், தரமற்ற பொருட்கள். இவை எல்லாவற்றிலும் விழிப்பாக இருந்து, மகிழ்ச்சியாகப் பண்டிகைகளைக் கொண்டாடுவதே எமது எதிர்பார்ப்பாகும்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

மாற்றங்கள் இல்லாத வாழ்க்கை அலுத்துப் போய்விடும். இதனால்த்தான் இன்பம், துன்பம், நெகிழ்ச்சி போன்றவை மனிதனுக்கு வந்துபோகின்றன.

எல்லா உணர்வுகளிலும் மனிதன் சிக்கிப் போகின்றான். ஆயினும் எவருமே துன்பமான வலையில் தொடர்ந்தும் சிக்கியிருக்க முடியாது. சிலரது நிலை அப்படியும் நிகழ்ந்துவிடுவதுண்டு. இத்தகைய நபர்களை ஆறுதல்படுத்துவது மானுடதர்மமாகும்.

சில வெற்றிகள் தொடர்ந்து நிகழ்ந்தால், அதுவே போதையாகி விடுவதுண்டு. சிலர், நிலை மாற்றங்களில் கர்வம் கொண்டு, எவரையும் மதிக்காமல் வாழ்வது, தவறு எனத் தெரியாமல் இருக்கிறார்கள்.

அடக்கமான வாழ்க்கை, ஒருவரை நிரந்தரமான அமைதி நிலைக்கு இட்டுச் சென்றுவிடும். ஒருவரை ஒருவர் கௌரவப்படுத்துவதால், தங்கள் ஒழுக்கத்தை உறுதிப்படுத்துகின்றார்கள். உலக வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்தாலே போதும்; எவருமே தவறு செய்ய முடியாது.

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

# தோல்விகரமான அரசாங்கத்தின் இறுதிக்கட்ட திருகுதாளங்கள்



புருஜோத்தமன் தங்கமயில்

‘மனிக்கே மகே ஹித்தே’ பாடல் மூலம், சர்வதேச ரீதியில் பிரபலமடைந்த பாடகி யொஹானி டி சில்வாவுக்கு, கொழும்பின் பத்தரமுல்ல, ரொபர்ட் குணவர்த்தன வீதியில் 9.68 பேர்ச்சர்ஸ் காணியை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்து இருக்கின்றது. குறித்த காணியின் தற்போதைய மதிப்பு, 15 மில்லியன் ரூபாயாக இருக்கும் என்று கணிக்கப்படுகின்றது.

இலங்கையில் கொழும்பு நகரப் பகுதி, யாழ்ப்பாணத்தின் நல்லூர் ஆகிய பிரதேசங்களின் காணிப் பெறுமதி, கடந்த சில ஆண்டுகளில் பல மடங்காக அதிகரித்திருக்கின்றது. அதுபோல, கொழும்பின் புறநகரான பத்தரமுல்ல பகுதியிலும், கடந்த பத்து ஆண்டுகளில் காணிப் பெறுமதி பல மடங்கு அதிகரித்திருக்கின்றது.

கொழும்பு நகரப் பகுதியில் நீடிக்கும் இட நெருக்கடியைக் குறைக்கும் முகமாக அரசாங்கம், தன்னுடைய நிர்வாகக் கட்டமைப்பின் அமைச்சுகள், திணைக்களங்கள் உள்ளிட்ட முக்கிய நிறுவனங்களை, கொழும்பு நகருக்கு வெளியில் நிர்மாணிக்கும் முடிவுக்கு வந்தது.

அதனையடுத்து, பத்தரமுல்ல மற்றும் அதனை அண்டிய பகுதிகள் அதற்காகத் தெரிவு செய்யப்பட்டு, கடந்த 15 ஆண்டுகளில், கணிசமான கட்டுமானங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவ்வாறான நிலையில், கொழும்பு நகருக்கு ஈடான நிலையை (குறிப்பாக காணிப் பெறுமதியில்) கொழும்பின் புறநகரான பத்தரமுல்லவும் அடையத் தொடங்கியது. அப்படிப்பட்ட முக்கிய பகுதியொன்றிலேயே யொஹானிக்கான காணியையும் அரசாங்கம் வழங்கியிருக்கின்றது.

மூத்த படைத்துறை அதிகாரிகள், பிரபலமான கிரிக்கெட் வீரர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்களுக்காக, கடந்த காலங்களிலும் அரசாங்கம் காணிகளை வழங்கியிருக்கின்றது. யொஹானிக்கும் அப்படியோர் அணுகுமுறையிலேயே காணி வழங்கப்பட்டிருக்கின்றது.

பொருளாதார ரீதியில் நாடு செங்குத்தான வீழ்ச்சியைச் சந்தித்திருக்கின்ற தருணத்தில், அரசாங்கத்தின் மீதான அதிருப்தி, தென் இலங்கையில் சொல்லிக் கொள்ள முடியாத அளவுக்கு அதிகரித்திருக்கின்றது.

அப்படியான நிலையில், யொஹானியின் பாடல் திடீரெனப் பிரபலமடைந்தமையை அரசாங்கம், தன்னுடைய நலனுக்காக பயன்படுத்த எத்தனித்தது. குறிப்பாக, அரசாங்கத்துக்கு எதிரான எதிர்ப்புணர்வுகள் மேலும் அதிகரிக்காமல் இருப்பதற்கான கவனக்கலைப்பானாக, யொஹானியின் திடீர் பிரபலம் பேணப்பட்டது.

தென் இலங்கை ஊடகங்களில் நாட்டின் பொருளாதார வீழ்ச்சி பற்றிய உரையாடல்களைக் காட்டிலும், யொஹானி பேசு பொருளானார். அது சில வாரங்களுக்கு, அரசாங்கத்துக்கு ஆசுவாசத்தை அளித்தது. அதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில், அவரை பாராளுமன்றத்துக்கு அழைத்துப் பாராட்டவும் அரசாங்கம் திட்டமிட்டது. ஆனால், அதற்கு எதிரான விமர்சனங்கள் எழுந்ததை அடுத்து, அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. இவ்வாறான நிலையிலேயே, பிரதமர் மஹிந்தவின் முன்மொழிவின் மூலம், யொஹானிக்கான காணியை அரசாங்கம் வழங்கியிருக்கின்றது.

யொஹானிக்கான காணி வழங்கப்படுவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கிய தினத்தன்று யாழ்ப்பாணம், மந்திகைப் பகுதியில் இளைஞர் ஒருவர் பட்டத்தோடு சேர்ந்து 100 அடிக்கும் அதிகமான உயரம் பறந்தார். அவரை, அவரது நண்பர்கள் ஒருவாறாகக் காப்பாற்றினார்கள்.

இந்த விடயம் உள்ளூர் ஊடகங்களில் மாத்திரமல்லாமல், சர்வதேச ஊடகங்களிலும் கவனம் பெற்றது. பட்டத்தோடு சேர்ந்து பறந்த தன்னுடைய திகில் அனுபவங்களை, ஊடகங்களில் சம்பந்தப்பட்ட இளைஞர் பகிர்ந்து வருகிறார். கடந்த நாள்களில் திடீரென அவர் பிரபலமானார்.

அப்படியான நிலையில், யொஹானிக்கு வழங்கப்பட்டது போல, குறித்த இளைஞருக்கும் காணியை அரசாங்கம் வழங்குமா என்ற கேள்விகளை, சமூக ஊடகங்களில் பலரும் எழும்பி வருகிறார்கள். ஏனெனில், யொஹானி எப்படி சமூக ஊடகங்களால் பிரபலமடைந்தாரோ அதுபோல, பட்டத்தோடு பறந்த இளைஞரும் சமூக ஊடகங்களாலேயே பிரபலமடைந்திருக்கிறார் என்பது அவர்களது வாதம்.

யொஹானிக்கு நாட்டின் முக்கிய பகுதியில் காணியை வழங்கும் அரசாங்கம், வடக்கு, கிழக்கில் தனியாரின் பல்லாயிரம் ஏக்கர் காணிகளை அடாத்தாக இன்னமும் பிடித்து வைத்திருக்கின்றது. இன்றைக்கும் யாழ்ப்பாணத்தில் கரையோரங்களில் படையினருக்காக காணிகளை அளவிடும் முயற்சிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. காணிகளின் சொந்தக்காரர்கள் ஒவ்வொரு நாளும், தங்களது காணியை எப்படிக் காப்பாற்றுவது என்று அறியாது இருக்கிறார்கள்.

வலிகாமம், கேப்பாப்புலவு தொடங்கி வடக்கு, கிழக்கில் இராணுவம் உள்ளிட்ட படைத்துறைக் கட்டமைப்பு பிடித்து வைத்திருக்கும் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று பொதுமக்கள் பல வருடங்களாக அறவழிப் போராட்டங்களையும் சட்டப் போராட்டங்களையும் நடத்தி வருகிறார்கள். ஆனால், அவற்றுக்கெல்லாம் எந்த வகையிலும் அரசாங்கம் இறங்கி வந்திருக்கவில்லை.

அவை தொடர்பில், தென் இலங்கை ஊடகங்களில் என்றைக்கும் கவனம் பெற்றதுமில்லை. தங்களது காணிகளை மீட்கப் போராடி வரும் மக்களை பிரிவினைவாதிகளாக சித்திரிக்கும் நிலையே, இதுவரை தென் இலங்கையில் பேணப்பட்டு வந்தது. ஆனால், கடந்த ஒன்றரை ஆண்டுகளில், சொந்தக் காணிகளைப் பாதுகாத்தல் என்பது, எவ்வளவு முக்கியமானது என்ற விடயத்தை தென் இலங்கை மக்களும் உணரத் தொடங்கிவிட்டார்கள்.

கொழும்பு உள்ளிட்ட நாட்டின் முக்கிய பகுதிகளிலுள்ள காணிகளை, சீனாவுக்கு 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடும் திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. ஒரு நூற்றாண்டு காலத்துக்கு இன்னொரு நாட்டுக்கு காணிகளை, எந்தத் தீர்க்கதரிசனமும் இல்லாமல் அரசாங்கமொன்று வழங்குமென்றால், அந்த நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியானது.

ஒரு நூற்றாண்டு காலம் என்பது, நான்கு, ஐந்து தலைமுறைகளுக்கான காலம். அந்தக் காலப்பகுதியின் உள்நாட்டு வெளிநாட்டு அரசியலும், இராஜதந்திர சூழலும் எவ்வாறான மாற்றங்களை எல்லாம் அடைந்திருக்கும் என்று சொல்ல முடியாது.

அப்படியான நிலையில், குத்தகைக்கு பெற்ற நிலங்களை சீனாவோ அல்லது இன்னொரு தரப்போ மீண்டும் கையளிக்கும் நிலை இருக்குமோ என்பது நிச்சயமில்லை. எப்படி வடக்கு, கிழக்கில் மக்களின் காணிகளை அடாத்தாக பிடித்து வைத்திருக்கும் படைத்துறைக் கட்டமைப்பு இன்றைக்கு நடந்து கொள்கின்றதோ, அவ்வாறான நிலையை, சீனா பேணாது என்று எப்படி ராஜபக்‌ஷர்கள் கருதுகிறார்கள் என்று தெரியவில்லை. இந்த விடயத்தைக் குறித்து, தென் இலங்கையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக தற்போது கேள்விகள் எழத்தொடங்கி இருக்கின்றன.

இலங்கைக்குள் சீனா இன்றைக்கு செலுத்திக் கொண்டிருக்கும் அதிகாரத்துக்கு, அண்மையில் யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த சீனத் தூதுவரின் நடவடிக்கைகளை உதாரணமாகச் சொல்லலாம்.

யாழ்ப்பாணத்துக்கான தன்னுடைய விஜயத்தின் போது, பருத்தித்துறை முனைக் கடற்கரைக்குச் சென்ற சீனத்தூதுவர், அங்கு ‘ட்ரோன்’ கமெராவைப் பறக்க விட்டு அவதானித்து இருக்கின்றார். இன்னொரு நாட்டுக்குள் வெளிநாடொன்றின் தூதுவர் ‘ட்ரோன்’ கமெராவைப் பறக்க விடுகிறார் என்றால், அது எவ்வளவு தூரம் பாரதூரமானது என்பது தெரியும்.

இராஜதந்திர ரீதியில், இலங்கை தன்னுடைய பிடிக்குள் இருக்கின்றது; எந்தவித கேள்விகளையும் எழுப்ப முடியாது என்ற விடயத்தை வெளிப்படுத்துவதற்காகவே முனைக் கடற்கரையில் சீனத்தூதுவர் ட்ரோனைப் பறக்க விட்டார். அதன் மூலம், இந்தியாவுக்கான செய்தியையும் அவர் சொல்லியிருக்கின்றார்.

இலங்கையின் பொருளாதார வீழ்ச்சியைப் பிணையெடுக்கும் நடவடிக்கைகளில் இந்தியா ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. அப்படியான நிலையில், இலங்கையை இந்தியா பிணையெடுத்தாலும், இலங்கை மீதான தன்னுடைய பிடி மிகவும் இறுக்கமானது என்று சீனத்தூதுவரின் யாழ். விஜயம் உணர்த்தி இருக்கின்றது.

இவ்வாறான நிலையில், அதனையெல்லாம் தென் இலங்கை காணாது, இருப்பதற்காக யொஹானிக்கு காணி வழங்கும் விடயம், ராஜபக்‌ஷர்களால் முன்னிலைப்படுத்தப்பட்டு, ஊடகங்களில் கவனம் பெற்றிருக்கின்றது.

தோல்விகரமான ஓர் அரசாங்கத்தின் இறுதி கட்ட திருகுதாளங்களை, இவ்வாறான விடயங்களின் மூலம் செய்து, மக்களை ஏமாற்ற முனைகிறார்கள். அதனை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இல்லையென்றால், இலங்கையின் மீட்சி என்றைக்குமே நிகழாது.

## கடிதங்கள்

### பெரிய பரந்தனில் சட்டவிரோத செயல்களை கட்டுப்படுத்தவும்

கிளிநொச்சி நகரை அண்மித்த பெரிய பரந்தன் கிராமத்தில் தொடரும் கசிப்பு உற்பத்தி, விற்பனை போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளால் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொள்வதாக கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர்.

கரைச்சி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராமங்களில் ஒன்றான பெரிய பரந்தனில் ஏறத்தாள 350க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன. இவர்களின் பிரதான தொழில் விவசாயமும் அன்றாடம் கூலி வேலைக்குச் செல்வதும் ஆகும். இவ்வாறு அன்றாடம் உழைக்கும் தொழிலாளர் மத்தியில், கசிப்பு பாவனைய அதிகரித்துக் காணப்படுவது, அவர்களின் குடும்பங்கள் தொடர்ந்தும் வறுமையில் வாடுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது என பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் அமைப்புகள் விசனம் தெரிவிக்கின்றன.

குறிப்பாக, பெரிய பரந்தனில் குறிப்பிட்ட சில இடங்களில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் மற்றும் கஞ்சா போன்ற போதைப் பொருட்களின் விற்பனையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் கிராமத்தில் பல்வேறுபட்ட குற்றச்செயல்கள் இடம்பெற்றிருக்கின்றன.

அத்துடன், பகல் நேரங்களில்கூட மாணவர்கள், பெண்கள் வீதிகளில் செல்வதற்கு அச்சமடைந்துள்ளனர். காரணம், கசிப்பை அருந்திவிட்டு, போதையில் வீதியில் வருவோர், போவோரிடம் சேட்டை செய்வது, வெறுப்பையும் அசௌகரியங்களையும் ஏற்படுத்தி வருகின்றது. சில திருட்டு சம்பவங்கள் கூட இடம்பெற்றிருக்கின்றன.

எனவே, இந்நிலைமையைச் சீர்செய்வதற்கு மதுவரி திணைக்கள அதிகாரிகளும் பொலிஸாரும் அக்கறை எடுத்து, மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு வழிசமைக்க வேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

–யது பாஸ்கரன்

புதுடெல்லி:

வெளியுறவுத் துறை அமைச்சகம் உறுதி

# தமிழக மீனவர்களை மீட்க நடவடிக்கை

## தமிழகத்தில் தொடரும் போராட்டங்கள்

இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 68 பேரையும், விரைவில் விடுவிப்பது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும், கொழும்பில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் எடுத்து வருகின்றனர் என, மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட 68 மீனவர்கள் மற்றும் 75 மீன்பிடி படகுகளை மீட்க, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுபோன்ற அச்சமூட்டும் நிகழ்வுகள், தாக்குதல்கள், தொடர்ச்சியாக நடப்பதை தடுக்க, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வெளியுறவு அமைச்சருக்கு, முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம் எழுதியிருந்தார்.

இக்கடிதத்தை, தி.மு.க எம்.பிக்கள், மத்திய அமைச்சரை சந்தித்து வழங்கினர். இதையடுத்து, வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் அரிந்தம் பாக்சி கூறியதாவது: இந்திய தூதரக அதிகாரிகள் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களை நேரில் சந்தித்து, அவர்களுக்குத் தேவையான உடைகள், உணவுகள், முகக்கவசம் உள்ளிட்டவற்றை அளித்து உள்ளனர். மீனவர்கள் தங்கள் குடும்பத்தினருடன், தொலைபேசியில் பேசவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அவர்களுக்கு தேவையான சட்ட உதவிகளும் செய்யப்பட்டுள்ளன.

உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ள ஒரு மீனவரை, தூதரக அதிகாரிகள் மருத்துவமனையில் சந்தித்து நலம் விசாரித்துள்ளனர். கைதான மீனவர்களை விரைவில் விடுவிக்க தேவையான, அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்றார்.

இதேவேளை, புதுக்கோட்டை,



ஜெகதாப்பட்டினம் மீனவர்கள் நேற்று (22) முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அனைத்துப் படகுகளும் ஜெகதாப்பட்டினம் விசைப்படகு மீன்பிடி இறங்கு தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து, ஜெகதாப்பட்டினம் விசைப்படகு மீனவர் சங்கத்தினர் கூறுகையில், ''புதுக்கோட்டை மாவட்டத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு முன்பு கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற விசைப்படகை மூழ்கடித்து, அதில் இருந்த 4 மீனவர்கள் கொல்லப்பட்டனர். இதேபோன்று, இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒரு மீனவர் கொல்லப்பட்டார். இலங்கை கடற்படையினரால் மீனவர்களைக் கொலை செய்வது, சிறைப்பிடிப்பது போன்ற நடவடிக்கைகள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. இதுகுறித்து மத்திய அரசிடம் பல முறை வலியுறுத்தியும் எவ்விதத் தீர்வும் ஏற்படவில்லை. இதில், இரு நாட்டு மீனவர்களும் இணக்கமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கான சூழலை உருவாக்க வேண்டும். மீனவர்களையும் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி காலவரையற்ற போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் என்று தெரிவித்தனர்.

அத்துடன், இராமேஸ்வரம், தங்கச்சிமடத்தில் மீனவர்களின் மாபெரும் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்று வருகிறது.

அத்துடன், சீன தூதர், ராமர் பாலம் வரை வந்து பார்த்துச் சென்றமை தொடர்பாக, இராமேஸ்வரம் மீனவர் சங்க தலைவர் என்.ஜே.போஸ் கூறியதாவது: ராமர் பாலம் மூன்றாம் மணல் தீடை வரை, பார்த்துச் சென்றுள்ளார். இந்தியாவின் கடல்வழி பாதுகாப்பு அரணாக உள்ள ராமர் பாலத்தை, முதன் முதலாக பார்த்த சீன தூதரிடம், அந்நாட்டு நிருபர்கள் கேட்டதற்கு, 'இது முடிவல்ல; தொடரும்' என பதில் அளித்துள்ளார். 17ஆம் திகதி, சீனத் தூதர் பார்த்த பின், மறுநாள் முதல் தொடர்ச்சியாக 67 மீனவர்கள், 10 படகுகளை கைது செய்துள்ளனர். இனி வரும் காலத்தில், பாக்ஜலசந்தி கடலில் தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பது கேள்விக்குறியாகும். இப்பகுதியில், சீனாவின் ஆதிக்கம் அதிகரிக்க கூடும். இதனால், நம் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் அபாயம் உள்ளது. என்று கூறினார்.

---

புதுடெல்லி:

சென்னை விமான நிலையம்:

# தங்கக் கடத்தல் பறிமுதலில் முதலிடம்



நடப்பு நிதியாண்டில் கடத்தல் தங்கம் பறிமுதலில் சென்னை விமான நிலையம் முதலிடம்!: ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தகவல்

இந்தியாவிலேயே சென்னை மற்றும் கோழிக்கோடு விமான நிலையங்களில் தான் அதிக அளவில் கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார். பொதுவாக, சென்னை, கோழிக்கோடு, திருச்சி, கொச்சின் ஆகிய விமான நிலையங்கள் மூலமாக அதிகளவில் தங்கம் கடத்தி வரப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

நடப்பு நிதியாண்டில், நவம்பர் மாதம் வரையிலான காலகட்டத்தில், சென்னை விமான நிலையத்தில் மட்டும் 130 கிலோ கிராம் தங்கமும் கோழிக்கோட்டில் 28 கிலோ கிராம் தங்கமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, திருச்சிக்கு திங்கட்கிழமை (20) இரவு டுபாயில் இருந்து ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் வந்தது. அதில், ஆலங்குடியைச் சேர்ந்த பிரபாகரன்( வயது 25) என்ற பயணியும் வந்தார். பயணிகள் வெளி வருகை பகுதியில் நின்ற இரண்டு பேர் பிரபாகரனிடம், "தங்கம் எங்கே" எனக் கேட்டு மிரட்டினர்.

இதனால், மீண்டும் விமான நிலையத்துக்குள் ஓடி சென்ற அவர், அதிகாரிகளிடம் "டுபாய் விமான நிலையத்தில் தன்னிடம் இரண்டு பேர், 4 பொட்டலங்களைக் கொடுத்து திருச்சி ஏர்போர்ட்டில் 2 பேர் நிற்பார்கள். அவர்களிடம் கொடுக்கும்படி கூறினர். பணத்துக்காக ஆசைப்பட்டு பொட்டலங்களை எடுத்து வந்ததாகவும், அதிகாரிகள் சோதனைக்கு பயந்து வெஸ்டன் டொய்லெட்டில் வீசியதாகவும் கூறினார்.

இதையடுத்து, விமானநிலைய அதிகாரிகள், பிரபாகரன் டொய்லெட்டை பார்த்த போது அதில் 700 கிராம் தங்கம் இருந்தது தெரிய வந்தது. இதுதொடர்பாக அதிகாரிகள் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

---

பெங்களூர்:

# கர்நாடக பொலிஸில் திருநங்கைகளுக்கு அனுமதி

பெங்களூரில் உள்ள 'சங்கமா' எனும் திருநங்கைகள் அமைப்பு, 2020ஆம் ஆண்டு கர்நாடக உயர் நீதிமன்றத்தில் பொலிஸ் உள்ளிட்ட முக்கிய துறைகளில் திருநங்கைகளை பணியில் அமர்த்த அரசுக்கு உத்தரவிட வேண்டும் என பொதுநல மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தது.

இதை ஏற்ற நீதிமன்றம், 'சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ள திருநங்கைகளுக்கு முன்னுரிமை வழங்கி, அரசு பணியில் அமர்த்த வேண்டும்' என உத்தரவிட்டது. இதையடுத்து கர்நாடக பொது ஊழியர்களுக்கான விதிமுறையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, அரசு பணிகளில் திருநங்கைகளுக்கு ஒரு சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

---

குஜராத்

மனைவியின் செல்லப்பெயரை நாய்க்கு வைப்பதா?

# சோனுவால் வந்த சோகம்

குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த நீடாபென் சர்வையா என்ற பெண்மணி செல்லப்பிராணியான நாய் ஒன்றை வளர்த்து வருகின்றார். அந்த நாய்க்கு 'சோனு' எனப் பாசமாக பெயரிட்டு அழைத்து வந்துள்ளார்.

நீடாபென்னின் பக்கத்து வீட்டில் வசித்து வருபவர் பர்வத். இவர் தனது மனைவியை செல்லமாக 'சோனு' என்று அழைப்பாராம். இதனால் நீடாபென் தனது நாயை செல்லமாக 'சோனு' என்று அழைக்கும்போது, பர்வத் ஆவேசம் அடைந்துள்ளார்.

மனைவியை செல்லமாக 'சோனு' என்று தாம் அழைக்கும்போது, நாய்க்கு அந்த பெயரை வைத்து, பக்கத்து வீட்டு பெண் அழைக்கிறாரா? என கடுங்கோபம் அடைந்துள்ளார்.

திங்கட்கிழமை (20) நீடாபென் தனது கணவர் வெளியே சென்ற நேரம், இளைய மகன் உடன் வீட்டில் இருந்துள்ளார். அப்போது ஐந்துபேரை அழைத்துக்கொண்டு , நீடாபென் வீட்டுக்குச் சென்று வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார் பர்வத். மேலும், நீடாபென்னை தாக்கியுள்ளார். இவர்களிடம் இருந்து தப்பிக்க நீடாபென் சமையல் அறைக்குள் ஓடியுள்ளார்.

அப்போது பர்வத் உடன் வந்த நபர், சமையல் அறையில் இருந்து மண்ணெண்ணையை எடுத்து, நீடாபென் மீது ஊற்றி தீவைத்துள்ளார். சூடு தாங்காமல் நீடாபென் அலறி துடிக்க, பக்கத்து வீட்டில் இருந்தவர்கள் காப்பாற்ற ஓடி வந்துள்ளனர்.

அதேசமயம், வெளியில் சென்றிருந்த நீடாபென்னின் கணவரும் வீடு திரும்பினார். தனது மனைவி மீது தீ எரிவதை கண்டு, தான் அணிந்திருந்த கோட்-ஐ கழற்றி தீயை அணைத்துள்ளார்.

உடனடியாக நீடாபென் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். ஆனால், இதுவரை யாரையும் கைது செய்யவில்லை.

நாய்க்கு வைக்கப்பட்ட பெயரால் பெண் ஒருவர் மீது தீ வைக்கப்பட்ட சம்பவம் வினோதமாக பார்க்கப்படுகிறது.

---

# சித்தர்கள் அருளிய மகத்தான மருத்துவம்

## இன்று சித்தர் திருநாளாகும்



சித்த வைத்திய கலாநிதி செ.போல்ரன் றஜீவ் MD(S)
(மாவட்ட சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, நிலாவெளி)




சித்தர்கள் என்றழைக்கப்படுவோர் மனிதர்களாக இவ்வுலகத்தில் பிறந்து, எம்முடன் வாழ்ந்து, எம்மால் செய்யமுடியாத பலவற்றைச் செய்து, அட்டமா சித்தைப்பெற்று, தெய்வ நிலையை அடையும் மகான்களை, சித்துப் பெற்றறவர்கள் அல்லது சித்தர்கள் என்றழைக்கின்றோம்.

இந்தச் சித்தர் பெருமான்கள், மனித சமுதாயத்தின் நலனுக்காக மருத்துவ சேவை செய்து, பலநோய்களைக் குணமாக்கி, அவற்றை ஓலைச்சுவடிகளில் குறித்துவைத்து, அடுத்த பரம்பரைக்கு விட்டுச்சென்றனர். இவ்வாறு, தமிழ் மருத்துவ விஞ்ஞானிகளான 18 சித்தர் பெருந்தகைகளை 'பதினெண் சித்தர்கள்' என்று பட்டியலிடப்பட்டு உள்ளது.

இவர்களில் தலை சிறந்தவரும் தமிழ் மருத்துவமாம் சித்த மருத்துவத்தின் தந்தையுமான அகத்தியரின் பிறந்த தமிழ் மாதமான மார்கழியில் வரும் ஆயிலிய நட்சத்திர திதியை, சித்தர்கள் திருநாளாக 2018ஆம் ஆண்டு முதல், இந்தியாவின் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

முதலாவது சித்தர் திருநாள் 04.01.2018 இலும், இரண்டாவது சித்தர் தினம் 26.12.2018 இலும், மூன்றாவது சித்தர் தினம் 13.01.2020 இலும், நான்காவது சித்தர் தினம் 04.01.2021 இலும், 23.12.2021 ஐந்தாவது சித்தர் திருநாளும் கொண்டாடப்படுகின்றது.

சித்தர்கள் பல்துறை வல்லுநர்களாகத் திகழ்ந்துள்ளார்கள். சித்த மருத்துவம் சார்ந்த சித்தர்கள் பதினெண்மரான 1. நந்தீசர், 2. அகத்தியர், 3. போகர், 4. கருவூரார், 4. புலிப்பாணி, 5. கொங்கணவர், 6. அகப்பேய் சித்தர், 7. சட்டைமுனி, 8. சுந்தரானந்தர், 9. திருமூலர், 10. தேரையர், 11. கோரக்கர், 12. பாம்பாட்டி சித்தர், 13. சிவவாக்கியர், 14. உரோமரிஷி, 15. இடைக்காடர், 16. குதம்பைச் சித்தர், 17. பதஞ்சலி சித்தர், 18. கமலமுனி ஆகியோராவர்.

பெரிய ஞானக்கோவையில் கூறப்பட்ட பதினெண் சித்தர் வணக்கமாக,

நந்தியகத்தியர் மூலம் புண்ணாக்கீசர்
நற்றவத்துப் புலத்தியரும் பூனைக் கண்ணர்
கந்திடைக் காடரும் போகர் புலிக்கை யீசர்
கருவூரார் கொங்கணவர் மாகாலாங்கி
சிந்தியழகண்ண ரகப்பையர் பாம்பாட்டித்
தேரையரும் குதம்பைச் சட்ட சித்தர்
செந்தமிழ்ச்சீர் சித்தர் பதிணெண்மர் பாதம்
சிந்தித்தே அணியாகச் சேர்ந்து வாழ்வோம்.

மருத்துவத்துக்குத் தங்களின் பங்களிப்பைச் செய்த சித்தர்கள் 18 பேரையே நாம் பதினெண் சித்தர்களுக்குள் உள்ளடக்குகின்றோம். பதினெண் சித்தர்களில், சித்த மருத்துவத்தின் தந்தையான அகத்தியர் 04 யுகங்களும் 48 நாள்களும் வாழ்ந்திருக்கின்றார். இவர் திருவனந்தபுரத்திலுள்ள பொதிகை மலையில் சமாதியடைந்துள்ளார். இவரின் குரு சிவனாவார். இவரின் சீடர்கள் போகர், பாபாஜி, திருவள்ளுவர், புலத்தியர், மச்சமுனி ஆகியோராவர். இவர் மருத்துவம், காயகல்பம், தமிழ் இலக்கணம், யோகா போன்றவற்றை எமக்குத்தந்துள்ளார். அதிலும் அகத்தியர் எழுதிவைத்த பல நூல்கள் மூலமாக, மருத்துவத்திற்கு பெரிதும் பங்காற்றியுள்ளார்.

இவர்களைவிட,



இலங்கையில் ஈழத்துச் சித்தர்களாக பின்வருபவர்களை நூலாசிரியர் முத்தையா என்பவர் குறிப்பிடுகின்றார். கடையிற் சுவாமிகள், பரமகுரு சுவாமிகள், குழந்தைவேற் சுவாமிகள், அருளம்பல சுவாமிகள், யோகர் சுவாமிகள், நவநாத சுவாமிகள், பெரியானைக்குட்டி சுவாமிகள், சிந்தனைக்குட்டி சுவாமிகள், சடைவாத சுவாமிகள், ஆனந்த சடாட்சர குரு, செல்லாச்சி அம்மையார், தாளையான் சுவாமிகள், மகாதேவ சுவாமிகள், சடையம்மா, நாகநாத சித்தர்கள், நயினாதீவுச் சுவாமிகள் போன்றவர்களாவர். இவர்கள், மருத்துவத்துக்காக ஓலைச்சுவடிகள் எழுதியிருந்தார்கள் என்ற ஆதாரங்கள் கிடைக்கப்பெறவில்லை. இருப்பினும், இவர்களில் பலர் தங்களை நாடிவந்தவர்களின் நோய்களைத் தீர்த்துள்ளமையை அறியமுடிகின்றது. எனவே, ஈழத்துச் சித்தர்கள் தொடர்பான மேலும் பல ஆய்வுகளை மேற்கொள்வது இன்றியமையாததாகும்.


சித்த மருத்துவத்தின் தந்தை அகத்தியர் எழுதிய நூல்களைப் பட்டியலிட்டால், அகத்தியர் வைத்திய இரத்ன சுருக்கம், அகத்தியர் ஞானம், செந்தூரம் 300, கற்பமுப்பு, அகத்தியர் ரணநூல், அகத்தியர் பூரண சூத்திரம் 216, அகத்தியர் பரிபூரண அகராதி, அகத்தியர் தைல முறைகள், சௌமியசாகரம், அகத்தியர் லோகமாரணம், அகத்தியர் வாக்கியம், அகத்தியர் 100, அகத்தியர் 2000 பாகம் - 1, 2, 3, பெருநூல், பரிபாசைத்திரட்டு, பரிபூரணம் - 400, அகத்தியர் வைத்திய சிந்தாமணி, வைத்திய பூரணம் 200, ஸ்திரி புருஷ சாமுந்திரிகா இலட்ஷணம், அகத்தியர் சித்துகள், மரணகண்டி சுரநூல் போன்ற 45 நூல்களுக்கு மேல் கண்டறியப்பட்டு, இவை தற்போது மின் புத்தகங்களாக வடிவமைக்கப்பட்டுறமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இலங்கையிலும் அகத்தியரின் பணிநடை பெற்றுள்ளது என்பதற்கான போதிய ஆதாரங்கள் உள்ளன. திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர் (முத்து ஊர் - பழைய பெயர்) பிரதேசத்தில் கங்குவேலி (கங்கைவேலி  பழைய பெயர்) எனும் மகாவலி கங்கையின் கிளை ஆற்றினால் சூழப்பட்ட சிறிய நிலப்பரப்பில், அகத்தியர் தானறிந்த கலைகளைக் கற்பிக்கும் வளாகத்தை நிறுவியிருந்தார். இதனை அகஸ்தியர் ஸ்தாபனம் (Agsthiyar Campus) என்றழைக்கின்றோம்.

இங்கு அகத்தியர் மருத்துவம், வர்மம், யோகா, சித்ததத்துவம் போன்றவற்றை சீடர்களுக்குக் கற்றுக் கொடுத்து வந்தள்ளமைக்கான ஆதாரங்கள் தொலியல் மற்றும் வரலாற்றுத் துறை பேராசிரியர்களால் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அகஸ்தியர் ஸ்தாபனத்தில், அகத்தியரும் அவரது மாணவர்களும் வழிபட்ட சிவலிங்கம் இன்னமும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதைவிட முக்கியமாக, இலங்கையின் வடமத்திய மாகாணத்தில் காணப்படும் மலையில் செதுக்கபட்ட, கையில் ஏடு வைத்திருப்பது போன்று நின்ற சிலை அகத்தியரின் சிலை என்று, இந்திய தொல்லியல் ஆய்வுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. இச்சிலையை, இலங்கையை ஆண்ட மன்னர்களில் ஒருவரான பராக்கிரமபாகுவின் சிலை என இங்கு குறிப்பிடப்படுகின்றது. இவ்விடயம் ஆராய்ச்சிக்கு உட்பட்டதாகும்.

மேலும், அகத்தியர் ஒருவரல்ல; பலஅகத்தியர்கள் வாழ்ந்தனர் என்றும் 'அகத்தைதீயர்கள்' அதாவது, மனதின் எண்ணங்களை




எரித்தவர்கள் என பொருட்படுத்தி உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இருப்பினும் மருத்துவம் தந்த அகத்தியருக்கு, எமது சித்தர் வணக்கங்கள்.

மருத்துவத்திற்குத் தங்கள் அளப்பரிய சேவையைச் செய்த சித்தர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு, சித்தர்கள் மதங்களைக் கடந்தவர்கள்; அவர்களை எம்மதத்தவரும் மனதார வேண்டிக்கொள்ளலாம்.

இந்தியாவில் பின்பற்றப்பட்டு வரும் சித்தர் வணக்கமுறையொன்றை இங்கு குறிப்பிடுதல் பொருத்தமாகும். அமாவாசை, பௌர்ணமி ஏதாவதொரு நாளில் 18 எண்ணெய் விளக்கேற்றி, கிழக்குத் திசை நோக்கி அமர்ந்திருந்து, பதினெண் சித்தர்களை மனதார நினைத்து, வேண்டிய காரியத்தை நினைத்து வந்தால், அடுத்த அமாவாசை அல்லது பௌர்ணமி தினத்துக்குள் வேண்டிய காரியம் நிறைவேறி விடும் என்பார்கள். சித்தர்கள் வாழ்வில் பயணித்து, அவர்கள் காட்டிய ஆரோக்கிய வாழ்வை வாழ்வோம்!

எல்.பி.எல்: தம்புள்ள ஜையன்ட்ஸை வென்று

# இறுதிப் போட்டியில் ஜஃப்னா கிங்ஸ்

லங்கா பிறீமியர் லீக்கின் (எல்.பி.எல்) இறுதிப் போட்டிக்கு ஜஃப்னா கிங்ஸ் தகுதி பெற்றுள்ளது.

ஹம்பாந்தோட்டையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற தம்புள்ள ஜையன்ட்ஸுடனான இரண்டாவது தகுதிகாண் போட்டியில் வென்றே இறுதிப் போட்டிக்கு கிங்ஸ் தகுதி பெற்றுள்ளது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஜையன்ட்ஸின் பதில் அணித்தலைவர் நிரோஷன் டிக்வெல்ல, கிங்ஸை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ், அவிஷ்க பெர்ணான்டோவின் 100 (64), ரஹ்மனுல்லாஹ் குர்பாஸின் 70 (40), டொம் கொஹ்லர்-கட்மோரின் 15 (08), அணித்தலைவர் திஸர பெரேராவின் ஆட்டமிழக்காத 11 (07), ஷொய்ப் மலிக்கின் 06 (03) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை




இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், இம்ரான் தாஹீர் 4-0-24-0, நுவான் பிரதீப் 4-0-30-0 என்ற பெறுதியைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 211 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சார்பாக பில் ஸோல்ட் 22 (11), டிக்வெல்ல 18 (12), நஜிபுல்லா ஸட்ரான் 21 (15) என ஆரம்பங்களைப் பெற்றபோதும் சாமிக கருணாரத்னவின் ஆட்டமிழக்காத 75 (47) ஓட்டங்களைப் போன்று எவரும் நிலைத்து நிற்காமல் குறிப்பிட்ட இடைவெளிகளில் சுரங்க லக்மால், மகேஷ் தீக்‌ஷன, ஜேடன் சியல்ஸ், பெரேரா, வனிடு ஹஸரங்கவிடம் விக்கெட்டுகளை இழந்து 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 187 ஓட்டங்களையே பெற்று 23 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில், சியல்ஸ் 4-0-24-3, தீக்‌ஷன 4-0-23-2, ஹஸரங்க 4-0-32-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக பெர்ணான்டோ தெரிவானார்.

இந்நிலையில், இன்று இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கோல் கிளாடியேட்டர்ஸை கிங்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.



அல்–மதீனா கால்பந்தாட்ட அணிக்கு

## மேலங்கி வழங்கி வைப்பு

■ றாசிக் நபாயிஸ்

மருதமுனை அல் - மதீனா வித்தியாலய கால்பந்தாட்ட அணிக்கான மேலங்கி தொகுதியை ஜப்பானில் வசிக்கும் மருதமுனை நண்பர்கள் வட்டத்தின் சார்பாக அதன் உறுப்பினர் எம்.எல்.கே.எம். ஜம்சித்தால் பாடசாலையின் அதிபர் ஏ. குனுக்கத்துல்லாஸிடம் அன்பளிப்பு செய்யப்பட்டது.

மாணவர்களுக்கு இவ்வாறான சீருடைகளை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு விளையாட்டுத்துறையில் ஆர்வத்தை உண்டாக்குவதுடன் ஓர் ஊக்குவிப்பு நிலையை உருவாக்கி விளையாட்டின் மூலம் நல்லதோர் இளையோர் சமூகத்தை உருவாக்கும் நோக்கில் இவ்வாறான முன்னெடுப்புகள் செய்யப்படுகின்றன என ஜம்சித் தெரிவித்தார்.

**“ மாணவர்களுக்கு இவ்வாறான சீருடைகளை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு விளையாட்டுத் துறையில் ஆர்வத்தை உண்டாக்கி, ஊக்குவித்து நல்லதோர் இளையோர் சமூகத்தை உருவாக்க முடியும்**

இவ்வாறான செயற்திட்டங்கள் இதற்கு முன்னர் பெரியநீலாவணை அக்பர் வித்தியாலய மாணவர்களுக்கும், மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலய மாணவர்களுக்கும் கால்பந்தாட்ட அணிக்கான மேலங்கி வழங்கி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர், விளையாட்டு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டார்கள்.






33 ஆவது தேசி ய இளைஞர் விளையாட்டு விழாவில்

## சம்பியனான நிந்தவூர் கபடி அணி

■ எம்.என்.எம். அப்ராஸ்

33ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவில் கபடி போட்டியில் தேசிய மட்ட சம்பியனாக நிந்தவூர் கபடி வீரர்கள் தெரிவு செய்யப்பட்டு உள்ளனர்.

கொழும்பு சுகததாஸ விளையாட்டு அரங்கில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் வென்ற நிந்தவூர் மதீனா இளைஞர் கழக கபடி வீரர்களுக்கு தங்கப் பதக்கம், வெற்றிக் கிண்ணம், சான்றிதழ் மற்றும் பணப் பரிசுகள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் இப்போட்டியில் சிறந்த வீரராக மதீனாவின் கபடி வீரரும், தேசிய கனிஷ்ட கபடி அணி வீரருமாகிய எஸ். எம். சபிஹான் தெரிவு செய்யப்பட்டதுடன் குழுநிலைப் போட்டிகளில் இவர் சிறந்த வீரருக்கான விருது பெறும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில்

## முதலாமிடத்துக்கு முன்னேறினார் லபுஷைன்



சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசைப் போட்டியில் முதலாமிடத்துக்கு மர்னுஸ் லபுஷைன் முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் 154 ஓட்டங்களைப் பெற்றதைத் தொடர்ந்தே இரண்டாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி முதலாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

மர்னுஸ் லபுஷைன், 2. ஜோ றூட், 3. ஸ்டீவ் ஸ்மித், 4. கேன் வில்லியம்ஸன், 5. றோஹித் ஷர்மா, 6. டேவிட் வோணர், 7. விராட் கோலி, 8. திமுத் கருணாரத்ன, 9. பாபர் அஸாம், 10. ட்ரெவிஸ் ஹெட்.

இதேவேளை, பந்துவீச்சாளர்களின் தரவரிசையில், குறித்த டெஸ்டில் ஆறு விக்கெட்டுகளைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து 13ஆம் இடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி ஒன்பதாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

பற் கமின்ஸ், 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. ஷகீன் ஷா அஃப்ரிடி, 4. டிம் செளதி, 5. ஜொஷ் ஹேசில்வூட், 6. ககிஸோ றபாடா, 7. நீல் வக்னர், 8. ஜேம்ஸ் அன்டர்சன், 9. மிற்செல் ஸ்டார்க், 10. கைல் ஜேமிஸன்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜேஸன் ஹோல்டர், 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. இரவீந்திர ஜடேஜா, 4. ஷகிப் அல் ஹஸன், 5. பென் ஸ்டோக்ஸ்.

இந்நிலையில், மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான மூன்றாவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியில் 79 ஓட்டங்களைப் பெற்ற பாகிஸ்தானின் அணித்தலைவர் பாபர் அஸாம், துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் மூன்றாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி முதலாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

பாபர் அஸாம், டேவிட் மலான், 3. மொஹமட் றிஸ்வான், 4. ஏய்டன் மார்க்ரம், 5. லோகேஷ் ராகுல், 6. ஆரோன் பின்ஞ், 7. டெவோன் கொன்வே, 8. ஜொஸ் பட்லர், 9. றஸி வான் டர் டுஸன், 10. மார்டின் கப்தில்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு, வனிடு ஹஸரங்க, 2. தப்ரையாஸ் ஷம்சி, 3. அடம் ஸாம்பா, 4. அடில் ரஷீட், 5. ரஷீட் கான், 6. ஜொஷ் ஹேசில்வூட், 7. முஜீப் உர் ரஹ்மான், 8. ஷடாப் கான், 10. டிம் செளதி. முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு, மொஹமட் நபி, 2. ஷகிப் அல் ஹஸன், 3. லியாம் லிவிங்ஸ்டோன், 4. கிளென் மக்ஸ்வெல், 5. வனிடு ஹஸரங்க.

இஸ்ரேல்

4ஆம் கட்டத் தடுப்பூசிக்கும்

# பச்சைக் கொடி

முதியவர்களுக்கு 4ஆம் கட்ட கொரோனாத் தடுப்பூசியைச் செலுத்த இஸ்ரேல் அரசு முடிவு செய்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அத்துடன் அந்நாட்டிலுள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் முன்களப் பணியாளர்களுக்கும் 4ஆம் கட்டத் தடுப்பூசியைச் செலுத்த முடிவு செய்துள்ளதாகவும்



தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலில் தற்போது பெரும்பாலான மக்களுக்கு 3 ஆம் கட்டத் தடுப்பூசியாகப் பூஸ்டர் செலுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் அந்நாட்டில் தற்போது 4 ஆம் கட்டத் தடுப்பூசியையும் செலுத்துவதற்கும் அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து அந்நாட்டு பிரதமர் நஃப்தாலி பென்னட் கருத்துத் தெரிவிக்கையில் “தாமதிக்காமல் மக்கள் அனைவரும் 4ஆம் கட்டத் தடுப்பூசியைச் செலுத்திக் கொள்ள வேண்டும்” என்றார்.

சவூதி அரேபியா

நாத்திக கருத்தை பரப்பியவருக்கு

## 15 ஆண்டுகள் சிறை



நாத்திக கருத்தை பரப்பியதாக ஏமன் நாட்டைச் சேர்ந்த பத்திரிக்கையாளருக்கு சவூதிஅரேபிய அரசு 15 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்துள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய கிழக்கு நாடான சவூதி அரேபியா தீவிர மத கோட்பாடுகள் நிறைந்த நாடாகும். அங்கு மதத்தை நிந்திப்பது என்பது மிகப் பெரிய குற்றமாக பார்க்கப்படுவதோடு இக்குற்றத்திற்கு கடுமையான தண்டனைகளும் வழங்கப்பட்டு வருகிறன.

இந்நிலையில், ஏமன் நாட்டைச் சேர்ந்த பத்திரிக்கையாளரான அலி அபு லுகும் தனது ட்விட்டர் பக்கம் மூலம் மத எதிர்ப்பு கருத்துகளை பதிவிட்டதாக கூறப்படுகிறது.

இது தொடர்பான வழக்கை விசாரித்த சவூதி நீதிமன்றம், அவரது கருத்துக்கள் சமய எதிர்ப்பு, சமய நம்பிக்கையின்மை மற்றும் நாத்திகத்தை ஊக்குவிப்பதாகக் கூறி அவரை குற்றவாளியாக அறிவித்து15 ஆண்டுகளை சிறை தண்டனையும் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

எனினும் இதற்கு கண்டனம் தெரிவித்துள்ள *Reporters Without Borders (RSF)* என்ற அமைப்பு அலி அபுலோஹூமை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இத்தாலி

## தடுப்பூசி செலுத்துவது போல் நடித்த தாதி கைது



தாதியொருவர் பொலிஸார் உட்பட பலருக்கு தடுப்பூசி செலுத்துவது போல் நடித்து போலி சான்றிதழ் வழங்கிய சம்பவம் இத்தாலியில் இடம்பெற்றுள்ளது.

சிசிலியில் உள்ள ஒரு தடுப்பூசி மையத்தில் போலி தடுப்பூசி சான்றிதழ்கள் வழங்கப்படுவதாக கிடைத்த தகவலை அடுத்து அங்கு ரகசிய கமெரா பொருத்தி பொலிஸார் கண்காணித்த போதே இவ்விடயம் அம்பலத்துக்கு வந்துள்ளது.

குறித்த சிசிடிவி கமெராவில் தாதியொருவர் சிரிஞ்சில் உள்ள மருந்தை வெளியில் தெளித்துவிட்டு, ஊசி போடுவது போல் நடிக்கும் காட்சிகள் பதிவாகியுள்ளன.

இதனையடுத்து குறித்த தாதியைக் கையும் களவுமாகப் பிடித்த பொலிஸார் அவர் உட்பட இச்செயலுக்கு துணைபுரிந்த மேலும் இருவரைக் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பான்

## உயிரை மாய்த்த பிரபல பாடகி



பிரபல பாடகியொருவர் தன் உயிரைத் தானே மாய்த்துக் கொண்ட சம்பவம் ஜப்பானில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜப்பானைச் சேர்ந்த பிரபல பாடகியான சயாகா கன்டா என்பவரே கடந்த சனிக்கிழமையன்று இவ்வாறு தான் தங்கியிருந்த ஹோட்டலின் 6ஆவது மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாட்சுடா சீகோ என்ற பிரபல பாடகரின் மகளான இவர், சம்பவ தினத்தன்று சப்போரோ திரையரங்கில் நடைபெற்ற இசை நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டிருந்ததாகவும், இதனால் அவரைக்காண ரசிகர்கள் பலர் ஆவலுடன் அங்கு காத்திருந்ததாகவும் கூறப்படுகின்றது.

எனினும் நீண்ட நேரமாகியும் அவர் வருகை தராததால், அவரைத் தொடர்பு கொள்ள குறித்த நிகழ்ச்சியை ஒழுங்கு செய்திருந்த நிறுவனம் முயற்சி செய்துள்ளது.

இதன்போதே சயாகா கன்டா, தங்கியிருந்த ஹோட்டலின் 6-ஆவது மாடியிலிருந்து குதித்து தனது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு பொலிஸார் சென்று பார்த்த போது அங்குள்ள நீச்சல் குளத்தில் அவர் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா

## விற்பனைக்கு வரும் உயிர் காக்கும் டி–ஷேர்ட்

கத்திக்குத்துத் தாக்குதலில் இருந்து உயிரைக் காக்கும் வகையிலான டி-ஷேர்டுகளைப் பிரித்தானியாவைச் சேர்ந்த பிரபல ஆயுத உற்பத்தி நிறுவனமான பி.பி,எஸ்.எஸ். தயாரித்துள்ளது.

இது குறித்து அந்நிறுவனத்தினர் தெரிவித்ததாவது:

பொதுவாக, கவசம் அல்லது துப்பாக்கி தயாரிக்கும் நிறுவனங்கள் சாதாரண குடிமக்களுக்கான பாதுகாப்பு அங்கிகளைத் தயாரிப்பதில்லை.

இருப்பினும், எங்கள் நிறுவனம் மக்களைக் கத்திக் குத்துத் தாக்குதலில் இருந்து காப்பாற்றும் வகையில் இப்புதிய டி ஷேர்ட்டுக்களைத் தயாரித்து வருகின்றது.

இவ் உடையானது கார்பன் பைபரிலிருந்து தயாரிக்கப்படுவதால் உடலில் கத்தி உள்ளிட்ட கூர்மையான ஆயுதங்கள் உட்செல்லாத வகையில் பாதுகாக்கின்றது என்றனர்.



பிரான்ஸ்

## ஜனாதிபதியின் மனைவி ஆணா?

### வதந்தியால் பரபரப்பு

பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரோனின் மனைவியான பிரிஜிட் மேக்ரான் குறித்து வெளியான செய்தியொன்று அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரான்ஸில் கடந்த செப்டெம்பர் மாதம் பத்திரிகையொன்று வெளியிட்ட செய்தியொன்றில், ஜனாதிபதியின் மனைவியான பிரிஜிட் மேக்ரான் ஆணாக பிறந்து பெண்ணாக மாறியவர் என்றும் அவரின் நிஜ பெயர் ஜீன் மைக்கேல் டிரோக்னியூக்ஸ் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும், அச்செய்தியை எழுதிய பத்திரிக்கையாளர், தான் இது தொடர்பில் மூன்று வருடங்களாக பல்வேறு நிபுணர்களிடம் கருத்து கேட்டு, விசாரணை மேற்கொண்ட பின்புதான் பத்திரிகையில் வெளியிட்டேன் என்று கூறினார்.

அதனைத்தொடர்ந்து, கடந்த 10ஆம் திகதியன்று யூடியூபில்



அந்த வீடியோ பதிவிடப்பட்டது. எனினும் சுமார் 4 மணி நேரங்களில் அதனை நீக்கிவிட்டனர். அதற்குள், 4 லட்சத்து 70 ஆயிரம் பேர் அதனைப் பார்வையிட்டுள்ளனர்.

இதனால் கடும் கோபமடைந்த பிரிஜிட் மேக்ரான், இது குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரத் தீர்மானித்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் கடந்த 2017 ஆம் ஆண்டு, முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் மனைவி மிச்செல் ஒபாமா தொடர்பிலும் இது போன்ற வதந்திகள் பரவியமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 23 டிசெம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.